Registered as Newspaper

# உதயன்


பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :192 வைகாசி 26ஆம் நாள் திங்கட்கிழமை 08 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# தேர்தல் நடத்துவதில் ஏராளம் சிக்கல்கள்!

## தேர்தல் ஒத்திகையின் பின்னர் தவிசாளர் தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8

அம்பலாங்கொடையில் இடம்பெற்ற தேர்தல் ஒத்திகையில் சுகாதார முறைமைகளை முறையாகக் கையாள்வது குறித்து பரீட்சார்த்த நடவடிக்கைகளை கையாண்டோம். பல சிரமங்கள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எவ்வாறு இருப்பினும் தேர்தலை நடத்த வேண்டுமாயின் சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளை கண்டிப்பாக பின்பற்றவேண்டும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். 02 ›

## கொரோனா 1,835

கொழும்பு, ஜூன் 8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 21 பேர் அடையாளம் காணப் 13 ›

## குழுவாகச் சென்ற 13 பேர் கைது

பளை, ஜூன் 8

குழுவாக 7 மோட்டார் சைக்கிள்களில் சென்ற 13 இளைஞர்கள் பளைப் பொலி 13 ›

## மசகு எண்ணெய் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 8

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

கொரோனா பரவியிருந்தமையால் பல நாடுகள் முடக்கப்பட்டிருந்தன. இதனால் எரிபொருள் விலை சடுதியாக குறைந்திருந்தது. பல நாடுகள் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பொது மக்களின் அன்றாடச் செயற்பாடுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் இடமளித்துள்ளன. 13 ›

## ஏ.எல். பரீட்சை இன்னும் தீர்மானமில்லை

கொழும்பு, ஜூன் 8

இந்த ஆண்டு நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அறி 13 ›

## பொதுத் தேர்தல் திகதி இன்றும் தீர்மானிக்கப்படுவது சந்தேகமே?

கொழும்பு, ஜூன் 8

பொதுத் தேர்தலுக்கான திகதி இன்றைய தினமும் இறுதி செய்யப்படுவது சந்தேகமே என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன. அதனை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவும் நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளார்.

'தேர்தல் திகதி குறித்து நாளை (இன்று) நடைபெறும் 13 ›

## அந்நிய சக்திகளின் உளவாளியே ஹூல்

### அரச பங்காளியின் ஆகப் பிந்திய கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 8

தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் நாட்டுக்கு எதிரான அந்நிய சக்திகளின் உளவாளி என் 02 ›

## இலங்கை வான் பரப்பில் மர்மப்பொருள்



02 ›

## கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரும் வாக்களிக்க வேண்டும்

### பொறிமுறை தேவை என்கிறது பவ்ரல்

கொழும்பு, ஜூன் 8

கொரோனா காரணமாக தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களும் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுபவர்களும் தேர்தலில் வாக்களிப்பதற்கான பொறிமுறையொன்று ஏற்படுத்த வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது. 13 ›

## காவடியை இடைநடுவில் இறக்கிய பொலிஸார்

முல்லைத்தீவு, ஜூன் 8

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய பொங்கலுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதற்காகச் சென்ற தூக்கு காவடியை பொலிஸார் இடைநடுவில் இறக்கி திருப்பி அனுப்பிய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பொங்கல் நாளான 13 ›

## விமர்சனங்களுக்கு அஞ்சுபவரா ஹூல்?

### ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஜூன் 8

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் பலமாக செயற்பட்ட காலத்திலேயே புலிகளுக்கு எதிராக தைரியமாக பேசிய பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் இப்போது ஊடகங்களின் விமர்சனங்களை கண்டு அஞ்சவா போகின் 02 ›

## வாள்வெட்டில் 3 பேர் காயம்

### மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிப்பு



கொடிகாமம், ஜூன் 8

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டு தாக்குதலில் மூவர் காயமடைந் 13 ›

## 5000 ரூபா கொடுப்பனவில் கைவைத்த முகாமையாளர்!

### கொடிகாமம் சமுர்த்தி வங்கியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கொடிகாமத்தில் 5ஆயிரம் ரூபா இரண்டாம் தரகொடுப்பனவு வழங்கும்போது ஏராளமான குடும்பங்களுக்கு கொடிகாமம் சமுர்த்தி முகாமையாளர் 500 02 ›

## சங்கிலியன் வீதியில் வீடு உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 8

நல்லூர் சங்கிலியன் வீதியில் வசிக்கும் பிரபல கல்லூரியின் அதிபரின் வீடு உடைத்து உட்புகுந்த திருடர்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர். 13 ›

## இருதய சத்திர சிகிச்சை நிபுணரின் இடமாற்றம்

### மருத்துவமனை நிர்வாகத்தின் அசண்டையீனமே காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய இருதய சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.முகுந்தன் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் 02 ›

## தேர்தல்...

தேர்தல் ஒத்திகை அம்பலாங்கொடையில் நேற்று இடம்பெற்றது. சுமார் 200 பேர் அளவில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டு சுகாதார வழிமுறைகளை முறையாக கையாள்வது குறித்தும் பரீட்சார்த்த முறையொன்றும் கையாளப்பட்டது.

இதன் பின்னர் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆணைக்குழுத் தவிசாளர் தெரிவித்ததாவது:

முகக்கவசம் அணியும் போது முழுமையாக அதனைக் கழற்றாது முகம் தெரியக்கூடிய விதத்தில் சற்று கீழ் இறக்கினால் போதுமானது. அனைவரும் வாக்குச்சாவடிக்கு வரும் போது கறுப்பு அல்லது நீல வர்ணப் பேனையை எடுத்து வர வேண்டும். கையில் மை பூசுவது குறித்து இரண்டு, மூன்று யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது குறித்து விரைவில் அறிவிப்போம்.

**வாக்களிப்பு நிலையங்கள்**

வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். சிறிய இடங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க முடியாது. பாடசாலைகளில் சிறிய இடங்களைத் தெரிவுசெய்து மக்களை வரிசையில் நிற்க வைப்பதில் சில சிக்கல்கள் உள்ளன. இவற்றை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது. முன்னர் இந்தப் பிரச்சினைகள் இருக்கவில்லை. ஆனால் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய அவற்றை இம்முறை தேர்தலில் கையாள முடியாது. அதற்காக தேர்தல் விதிமுறைகளை மீறி மாற்று வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் முடியாது. அதனை நாம் கவனத்தில் கொண்டே தீர்மானம் எடுக்கின்றோம்.

**பரப்புரை**

தேர்தல் பரப்புரையின் போதும் பெரிய அளவில் கூட்டங்களை நடத்த வேண்டாம். சிறிய கூட்டங்களை நடத்துவது ஆரோக்கியமானது. வீடுகளுக்கு வாக்குக் கேட்டு செல்லும் போது கூட்டமாகச் செல்லாது குறைந்தது மூன்று பேர் மாத்திரம் சென்றால் போதும். சுகாதார அதிகாரிகள் அதிகாரத்தில் உள்ளனர். அவர்களின் பரிந்துரைகளை மீறி எதனையும் செய்ய முடியாது. தேர்தல் சட்டத்தை இம்முறை எவ்வாறு கையாள்வது என்பதில் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அதிகாரிகள் என்ன கூறுகின்றனர் என்பதைக் கேட்க வேண்டியுள்ளது.

சுகாதார அதிகாரிகள் இறுதி அனுமதி வழங்கும் வரையில் நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கவில்லை. தேர்தலுக்கான அடுத்த கட்ட வேலைகளை நாம் முன்னெடுத்து வந்தோம். அதிகாரிகளை தெளிவுபடுத்தல், தபால் வாக்களிப்பு எவ்வாறான முறையில் முன்னெடுப்பது என்ற வேலைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். பிரதான வேலைத்திட்டமான சுகாதார பணிப்புரை வரும் வரையில் நாம் வேடிக்கை பார்த்தோம் என்று கருத வேண்டாம்.

**வாக்கெண்ணல்**

தேர்தல் வாக்கெண்ணும் பணிகள் முன்னர் போன்று நடைபெறாது. இதில் இரண்டு தெரிவுகள் எமக்கு உள்ளன. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போல் அந்தந்த நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் நடத்தப்படுமா, அல்லது நான்கு மணிக்கோ ஐந்து மணிக்கோ வாக்களிப்பு நேரத்தை முடிவுக்கு கொண்டுவந்து வாக்கெண்ணும் நிலையங்களில் எண்ணிக்கையை அதிகரித்து சிறிதாக எண்ணுவதா என்ற இரண்டு தீர்மானங்கள் உள்ளன. இது எதுவும் நான் மாத்திரம் எடுக்கும் தீர்மானம் அல்ல. ஆணைக்குழுவின் மூவருமே இதில் இணக்கம் தெரிவிக்க வேண்டும். இவை அனைத்துமே பிரச்னைகள் தான், ஆனால் இவை அனைத்தையும் விட பிரதான பிரச்சினை ஒன்று உள்ளது.

**அச்சுறுத்தல்**

மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும். வாக்களிக்கும் ஜனநாயக உரிமை பின்பற்றப்பட வேண்டும். அதற்காக கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு இடமளிக்க முடியாது. இன்னமும் அச்சுறுத்தல் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். மக்களை அதிக நேரம் ஒரு இடத்தில் கூட்டம் கூட இடமளிக்க வேண்டாம் என்பதே அனைவரதும் கோரிக்கையாக உள்ளது. தேர்தல் நடத்தினால் மக்கள் வருவார்கள். ஆனால் அவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், என்றார். (ஒ.5)

## 5000...

ரூபாவைக் கழித்துவிட்டு 4 ஆயிரத்து 500 ரூபா மட்டுமே வழங்கியுள்ளார் என்று பயனாளிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து 100 ரூபாவை கணக்கில் வைத்துக்கொண்டு 400 ரூபாவை பயனாளிகளிடமே வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. குறித்த கொடுப்பனவில் 100 ரூபாவைக்கூட எடுக்காது முழுத் தொகையையும் பயனாளிகளிடமே வழங்கிவிடுங்கள் என்று தேசிய சமுர்த்தி அலுவலர் மற்றும் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அலுவலர் சங்கம் வலியுறுத்தியிருந்தது. தற்கால இடர்சூழலில் மக்களிடம் பணத்தை அறவிடுவது நல்லதல்ல என்றும் சங்கம் குறிப்பிட்டிருந்தது. எனினும், அதை புறந்தள்ளி சமுர்த்தி வங்கியின் கொடிகாமக் கிளை மக்களின் பணத்தில் கைவைத்துள்ளது. அங்குள்ள குறிப்பிட்ட சிலகிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் ஆயிரத்து 500 பேரிடம் 500 ரூபா கொடுப்பனவு கழிக்கப்பட்டு4 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி பயனாளிகள் பிரதேச செயலருக்கும் சமுர்த்தி திணைக்களத்துக் கும் முறையிட்டுள்ளனர். அதையடுத்தே ஒவ்வொருவருடைய கணக்கு இருப்பிலும்100 ரூபாவை வைத்துக்கொண்டு மிகுதி 400 ரூபாவையும் பயனாளிகளிடமே வழங்குமாறும் தென்மராட்சிப் பிரதேச செயலர் கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளருக்கு கடந்த புதன்கிழமை கடிதம்அனுப்பியுள்ளார். "இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாளை (இன்று) திங்கட்கிழமை சகலருக்கும் 400 ரூபாவும் வழங்கப்பட்டுவிடும்" என்று தென்மராட்சிபிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பொறுப்பாளர் அன்ரனி தெரிவித்தார். (த)

## அந்திய...

றும், மனநோயாளி எனவும் கோத்தா அரசின் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கடுமையாக விமர்சித்துள்ளது.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர,

ஹூல் என்பவர் இலங்கை அரசுக்கு எதிராக செயற்படும் சக்திகளுடன் தொடர்பை வைத்துள்ளார். எமது நாட்டு இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். அது மட்டுமல்ல தேர்தலை ஒத்திவைப்பதற்குரிய முயற்சியிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகிறார். தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் கூட சென்றிருந்தார்.

பிரிவினைவாதிகள், அடிப்படைவாதிகள், அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையிலேயே அவரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறும் வகையில் தனது மகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு கூட அழைத்துச் சென்றிருந்தார். அதேபோல் அரச சார்பற்ற அமைப்புகளின் நிதி பங்களிப்பில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் 52 பேருக்கு கருத்தரங்கொன்றை நடத்துவதற்கு முன்னின்று செயற்பட்டார்.

இலங்கை அரசுக்கு விரோதமாகவும், தேர்தலை நடத்துவதற்கு எதிராகவும் செயற்படும் ஹூல் தற்போது சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும் கருத்து வெளியிட்டு தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை சவாலுக்குட்படுத்தியுள்ளார். தேர்தல் ஆணைக்குழு மீது மட்டுமல்ல அரசமைப்புச் சபை மீதும் அவர் காறி உமிழ்ந்துள்ளார். அப்படி இருந்தும் ஹூலின் செயற்பாடுகளுக்கு வெள்ளையடிப்பு செய்யும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் செயற்பட்டு வருகிறார். மறுபுறத்தில் அரசமைப்புப் பேரவையின் தலைவர் முன்னாள் சபாநாயகரும் மௌனம் காத்துவருகிறார். ஒன்று ஹூல் என்பவர் நாட்டுக்கு எதிரான உளவாளியாக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மனநோயாளியாக இருக்கவேண்டும். அவர் உளவாளி இல்லையேல் உடனடியாக மனநல வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசுக்கு எதிராகவும், ஒரு தரப்புக்கு சார்பாகவும் செயற்பட்டால் எப்படி சுயாதீன தேர்தலை எதிர்பார்க்க முடியும். ஆகவே, அந்நிய சக்திகளின் தேவைக்கேற்ப செயற்படும் ஜனநாயக விரோதியான ஹூலுக்கு எதிராக சட்டபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.5,44)

## இருதய...

சென்றமைக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகத்தின் அசண்டையீனமே காரணம் என்று மக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய ஒரே ஒரு தமிழ் இருதய சத்திர சிகிச்சை நிபுணரான எஸ். முகுந்தன் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் தனது சுய விருப்பிலேயே இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இருதய சத்திரசிகிச்சை தொடர்பில் சரியான பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில், அவர் சேவை ஆற்றுவதில் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டமையால் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட இருதய நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக் காக காத்திருக்கும் நிலையில், சத்திரசிகிச்சை நிபுணர் கொழும்புக்குச் சென்றமை இங்கு சிகிச்சைக்காக காத்திருக்கும் நோயாளர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நிபுணர் கடமையாற்றிய வேளையில் அவருக்கென்று தனியான நோயாளர் அனுமதி விடுதி மற்றும் உரிய ஏனைய அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், சத்திர சிகிச்சை நிபுணர் மன உளைச்சலுக்கு உள்ளாகிய நிலையில் கொழும்பு நோக்கி செல்வதற்கான முடிவை எடுத்ததாகத் தெரிய வருகிறது.

சத்திரசிகிச்சை நிபுணர் திறந்த இருதய சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்ததைப் பாராட்டி பல இடங்களிலும் அவருக்குப் பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டிருந்தன. அத்துடன், யாழ்ப்பாண மண்ணில் தொடர்ந்து சேவையாற்றுவேன் என்று அவர் அந்த நிகழ்வுகளில் தெரிவித்திருந்தார். ஆனால், அவர் பணியாற்றக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க மருத்துவமனை நிர்வாகம் தவறியமையாலேயே, கொழும்புக்கு சுய விருப்பில் இடமாற்றம் பெற்றுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இந்த இடமாற்றத்தை அண்மையில் உறுதிப்படுத்தியிருந்தார். அத்துடன் கொழும்பிலிருந்து அவருக்கு பதிலாக சத்திரசிகிச்சை நிபுணர் வந்த பின்பே சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தன் விடுவிக்கப்படுவார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எந்தவொரு சத்திரசிகிச்சை நிபுணரும் கொழும்பிலிருந்து நேற்று வரையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வந்து பொறுப்பேற்காத நிலையிலேயே, சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தன் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார். அவர் இன்று கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரியவருகின்றது. (ஒ.5,159)

## விமர்சனங்களுக்கு...

றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஜித்.பி.பெரேரா கேள்வி எழுப்பினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'ஊழல் குற்றவாளிகள், மக்களை ஏமாற்றும் தலைமைகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று ஹூல் கருத்தைக் கூறியவுடன் அந்தக் கருத்து சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு கூறியதாக நினைத்துக் கொண்டு பொதுஜன முன்னணியினர் கொந்தளிக்க ஆரம்பித்துள்ளனர். கட்சி பெயர்களோ ஆள் அடையாளமோ கூறாது அவர் பொதுவாக ஒரு கருத்தைக் கூறியவுடன் தாம் தான் அதற்கு பொருத்தமான நபர்கள் என்று பொதுஜன முன்னணியினர் தொப்பியை எடுத்துப் போட்டுள்ளனர்' என்றார் அஜித் பி.பெரேரா. (ஒ.5)

## இலங்கை...

வானில் பறக்கும் தட்டு போன்ற அடையாளம் காண முடியாத மர்மப் பொருள் ஒன்றை ஹோமாகம, பிட்டிப்பன, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 இற்க்கு பலரும் அவதானித்துள்ளனர்.

சுமார் 10 நிமிடங்கள் வரை வானில் இந்த மர்ம பொருள் இருந்துள்ளது.

இதற்கான வீடியோ மற்றும் படங்கள் தமக்கு கிடைத்துள்ளதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் வானியல் துறையின் இயக்குநர் பேராசிரியர் சந்தன ஜெயரத்தன தெரிவித்துள்ளார். (ஒ.5)

## உறவுகள் வவுனியாவில் நேற்றும் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூன் 8
காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி, வவுனியாவில் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கதறி அழுது, கண்ணீர்விட்டு உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போர்க் காலத்திலும், அதனை அண்டிய காலப் பகுதியிலும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தருமாறு கோரியும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

வவுனியாவில் ஆயிரத்து 200ஆவது நாளைத் தாண்டியும் முன்னெடுக்கப்படுகிறது. வவுனியா நீதிமன்றத்துக்கு முன்பாக கடத்தப்பட்ட தனது மகனைத் தேடி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர் அண்மையில் உயிரிழந்தார். கடத்தப்பட்ட அவரின் மகனுக்கு நீதிகோரியே நேற்றும் உறவுகள் போராட்டத்தை முன்னெடுத்தனர். வவுனியாவில் நீதிமன்றத்துக்கு முன்பாக கடத்தப்பட்ட மகன் எங்கே?, எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும், வெளிநாடு தலையிட்டு எமக்குரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும், உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?, சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கதறி அழுது உறவுகள் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர். உயிரிழந்த சின்னச்சாமி நல்லதம்பி (வயது-71) என்ற தந்தையின் உருவப்படத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மலர் தூவி கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தினர்.
(ஓ.ப18,110)

## தந்தையின் கட்சியிலிருந்து மகளை இடைநிறுத்த தீர்மானம்

கொழும்பு, ஜூன் 8
மலையக மக்கள் முன்னணியின் நிறுவுனத் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் மகளான சட்டத்தரணி அனுசா சந்திரசேகரனை கட்சியிலிருந்து இடைநிறுத்துவதற்கு மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னணியின் விசேட கூட்டமொன்று ஹட்டனிலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

'அமரர் சந்திரசேகரனின் மறைவுக்கு பின்னர், அவரை கௌரவப்படுத்தும் வகையில் அவரின் மகளான அனுசா சந்திரசேகரனுக்கு பிரதிச் செயலாளர் நாயகம் பதவியை வழங்கினோம். எனினும், சுயநலத்திற்காக அவர் கட்சியின் விதிமுறைகளை மீறி செயற்பட்டுவருகிறார். இதன் காரணமாகவே அவரை தற்காலிகமாக கட்சியில் இருந்து நீக்கியுள்ளோம்' என்று முன்னணியின் செயலாளர் நாயகம் அ. லோரன்ஸ் தெரிவித்தார்.

அனுசா சந்திரசேகரன் வகித்த பிரதிச் செயலாளர் நாயகம் பதவிக்கு ம.ம.முவின் மூத்த உறுப்பினரும் பேராசிரியருமான விஜயச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. ராதாகிருஷ்ணன் உட்பட முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஒ,5,44)

## மட்டக்களப்பு- கொழும்பு ரயில் சேவை ஆரம்பம்

மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு இன்று திங்கட்கிழமை காலை 6.10 மணிக்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபர் ஏ.யூ.என்.நுவைஸ் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் ரயில் சேவைகள் நாடாளாவிய ரீதியில் இடை நிறுத்தப்பட்டன.

இன்று திங்கட்கிழமை முதல் வழமையான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று நிலைய அதிபர் ஏ.யூ.என். நுவைஸ் மேலும் தெரிவித்தார். (க-150)



# தேர்தல் ஒத்திகை நேற்று இடம்பெற்றது

கொழும்பு, ஜூன் 8
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு பொதுத் தேர்தலை நடாத்துவது என்பது தொடர்பில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தேர்தல் ஒத்திகை அம்பலாங்காடை, விலேகொட தம்மயுக்திராமய விகாரையில் நேற்று நடைபெற்றது.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெற்றது. வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னால் கைகளைக் கழுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முகக்கவசம் அணிவது கட்டாயம், தனிநபர் இடைவெளியைக் குறிக்கும் வகையில் அடையாளங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஒருவருக்கு வாக்களிப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது, மணித்தியாலத்துக்கு எத்தனை பேர் வாக்களிக்கலாம் என்பன உட்பட மேலும் சில விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

'தற்போதைய சூழ்நிலையில் எவ்வாறு வாக்களிப்பை நடத்தலாம் என்பதை அறியவே இந்த முயற்சி. நாம் 10 மணிக்கு வாக்களிப்பை ஆரம்பித்து 12 மணிக்கு நிறைவு செய்தோம். இக்காலப்பகுதியில் 239 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. ஒரு மணிநேரத்தில் தனிவரிசையில் 100 வாக்குகள் விழுகின்றதெனில் மணித்தியாலயத்துக்கு 1000 வாக்குகள் விழும் என்பதை ஊகிக்க முடிந்தது' என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார். (ஒ,க,44)

## தமிழ் அரசுவின் கூட்டத்தை நிறுத்துவதற்கு முயற்சி?

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாண மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளைக் கூட்டத்தை தடுத்து நிறுத்துமாறு பொலிஸார் சுகாதார மருத்துவ அதிகாரியைக் கோரிய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளைக் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது.

இது தொடர்பான அறிவிப்பு இரு தினங்களுக்கு முன்னரே வெளியாகியிருந்தது. இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சி அலுவலகம் அமைந்துள்ள பகுதிக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரியை இரண்டு தரப்பினர் தொடர்பு கொண்டு கொரோனா காரணமாக சுகாதார முன்னெச்சரிக்கையின் கீழ் அதனைத் தடுத்து நிறுமாறு கோரினர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரும் சுகாதார மருத்துவ அதிகாரியைத் தொடர்பு கொண்டு கூட்டத்தை தடுத்து நிறுத்துமாறு கோரியுள்ளனர்.

நேற்றுக் காலை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மாட்டீன் வீதிக்குச் சென்ற சுகாதார மருத்துவ அதிகாரி கலந்துரையாடலின் விவரத்தையும் அதில் பங்குகொள்வோர் எண்ணிக்கையையும் கேட்டறிந்தார். பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தலையும் வழங்கிச் சென்றார்.

தற்போது 60 முதல் 100 பேர் வரையில் கலந்து கொள்ளும் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்படும் நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 10 தேர்தல் தொகுதிகளிலும் உள்ள கிளைகளில் இருந்து தலா ஐவர் வீதம் மொத்தமாக 50 பேரே அங்கம் வகிப்பதனால் 100 வீத வரவு உறுதி செய்யப்பட்டாலும் 50 பேர் என்ற எண்ணிக்கையைத் தாண்டாது என்ற விவரமும் தெரிவிக்கப்பட்ட நிலையில் கூட்டம் நடாத்த தடை இல்லை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.


இந்த நிலையில் நேற்று மாலையில் கூட்டம் இடம்பெற்றபோது ஓர் பொதுச் சுகாதார அலுவலர் நிலைமையை அவதானித்துச் சென்றுள்ளார்.
(ஒ,5,105)

## தெல்லிப்பழையில் வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்பு

தெல்லிப்பழை, ஜூன் 8
தெல்லிப்பழை கட்டுவன் பகுதியில் இராணுவத்தினர் நேற்று அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

பற்றைக்குள்ளிருந்து 'கஜேந்திரா' கோடாலிகள் இரண்டும், மலசலக் கூட குழியின் மேல் இருந்து ஒரு வாளும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன. மலசலக்கூட குழி இருந்த வீட்டின் உரிமையாளர் இராணுவத்தினரின் தேடுதல் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில் அங்கு இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் மீட்ட இந்தப் பொருள்களை தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம,20,26)





20 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாத கிளிநொச்சி குமாரசாமிபுரம் பாடசாலை வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கலைவாணியின் முயற்சியில் இது செப்பனிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

# யாழ். - கொழும்பு இடையே ரயில் சேவை இன்று ஆரம்பம்

## யாழ். ரயில் நிலைய அதிபர் அறிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 8**

**யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.**

ரயிலில் பயணம்செய்ய விரும்புவோர் இன்றிலிருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் ஆசன முன்பதிவு செய்யமுடியும்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த வடபகுதிக்கான ரயில் சேவைகள் அனைத்தும் இன்று 8ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை முதலாவது ரயில் பயணமாக உத்தரதேவி காங்கேசன்துறையிலிருந்து 5:30 க்கு புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து கொழும்புநோக்கி புறப்படவுள்ளது.

அதேபோல இரண்டாவது சேவையாக யாழ்தேவி, முற்பகல் 9 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து 9.45க்கு கொழும்புக்கு புறப்படும்.

இரவு தபால் ரயில் காங்கேசன்துறையிலிருந்து 6 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து 6:45 மணியளவில் கொழும்பு நோக்கி புறப்படவுள்ளது.

அதேபோல் நாளை செவ்வாய்க்கிழமை 3:45 மணிக்கு ரயில் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளது. எனவே ரயிலில்பயணம்செய்யவிரும்பும்பயணிகள் இன்றிலிருந்து யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் ஆசனங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று அதிபர் அறிவித்துள்ளார். (த)



# யாழ்.இந்துவில் மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுற்றாடல் தின நிகழ்வாக மரம் நடுகை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வருடாந்தம் சுற்றாடல் தின நிகழ்வானது மிகப் பெரிய அளவில் சாரணர்களும் சுற்றாடல் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்வது வழமை.

கொவிட் - 19 காரணமாக இந்தமுறை மிக அமைதியான முறையில் நிகழ்வு நடைபெற்றது. 2020 ஆம் ஆண்டு சுற்றாடல் தின தொனிப்பொருளாக 'இயற்கைக்கான தருணம்' உயிர்ப் பல்வகைமையை ஏற்படுத்துவோம். எனும் தொனிப்பொருளில் அமைந்தது. கல்லூரியில் தனியாள் இடைவெளி சுகாதார நடைமுறையை பின்பற்றி குறிப்பிட்ட சிலரே நிகழ்வில் பங்கேற்க முடிந்தது. கல்லூரி அதிபர் உரையைத் தொடர்ந்து சாரணன் செல்வன் சங்கமன், சுற்றாடல் தினம் கொண்டாடப்பட வேண்டிய அவசியம் பற்றி குறிப்பிட்டார். (த)

# ஐவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 8

கசிப்பு மற்றும் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகாவில் பகுதியில் கசிப்பு அருந்திக்கொண்டு இருந்த நான்கு பேரும், இயக்கச்சியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கோடாவுடனும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள்மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-6)

# செயற்றிட்ட உதவியாளர்கள் பணி தொடர அனுமதிக்கவும்

## அரசிடம் அவர்களின் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்டதாக கூறப்பட்டபோதும் 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18ஆம் திகதி தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாவதற்கு முன்பே தமக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, அரசு தாம் பணியைத் தொடர அரசு உறுதியான முடிவை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

செயற்றிட்ட உதவியாளர் பதவிக்கு 2019 ஆம் ஆண்டு மே 10ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் இந்த அமைச்சுக்கு அகில இலங்கை ரீதியில் விண்ணப்பதாரிகளால் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மேற்படி விண்ணப்பங்களுக்கான நேர்முகப்பரீட்சை 2019ஆம் ஆண்டு மே 10 இல் அலரிமாளிகையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது நேர்முகப்பரீட்சை 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9 இல் நடைபெற்றுமுடிந்தது. பின்னர் தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16ஆம் திகதியிடப்பட்ட நியமனக் கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் மேற்படி அமைச்சின் செயலரின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் 6ஆயிரத்து 547பேரும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் 999 பேரும் நியமனம் பெற்றிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு சென்று தமது கடமைகளை பொறுப்பேற்று கையொப்பமிட்டு வந்தனர். மேற்படி நியமனம் வழங்கப்பட்ட காலப்பகுதி கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலமாக அமைந்ததால் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும் நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்படுவதாக ஒரு தொலைநகல் அனுப்பிவைக்கப்பட்டது. இதன்படி மாவட்டச் செயலர் தேர்தல் முடிவடைந்த பின்னரே பணிக்கு அமர்த்த முடியும் எனக் கூறி அனைவரையும் திருப்பி அனுப்பியிருந்தார்.

எனினும், தேர்தல் தொடர்பான வர்த்தமானி 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18ஆம் திகதி வெளியிடப்பட்டது. எனவே தேர்தல் தொடர்பான சட்ட ரீதியான அறிவிப்புகள் வெளியிடப்படுவதற்கு முன்பாகவே நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பதைநாம் உறுதியாகக் கூறுகின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பிற்பாடு மீண்டும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்ற நியமனதாரிகளுக்கு, "நியமனம் தொடர்பாக தேர்தல்ஆணையாளர் மற்றும் குறித்த அமைச்சால் எவ்வித அறிவிப்புகளும் விடுக்கப்படவில்லை" என்றுகூறிய மாவட்டச் செயலர், நியமனதாரிகளை மீண்டும் திருப்பி அனுப்பியிருந்தார். அதனால் மிகுந்த ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பிச் சென்றிருந்தனர்.

இந்த நியமனம் தொடர்பாக ஆராய்ந்த தேர்தல்ஆணையாளர் நியமனதாரிகளை இணைத்துக் கொள்ளுமாறு தொலைநகல் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர் நிதி அமைச்சு நியமனத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது. இன்றுவரை எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 2020 மார்ச் மாதம் 3ஆம் திகதியளவில் தேர்தல் ஆணையாளர் மீண்டும் ஓர் ஊடக சந்திப்பை மேற்கொண்டுதான் இந்த நியமன இடைநிறுத்தத்தை நீக்கினேன் என்றும் ஆனால் அரசு இதை வழங்கவில்லையென்றும் அரசுக்கு இது தொடர்பில் பரிந்துரை செய்கின்றேன் என்றும் கூறினார்.

அரசு மௌனத்தை கலைத்து உத்தியோகபூர்வமாக எங்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று கோருகின்றோம்-என்றுள்ளது. (த-20)

# முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலில் சிறப்புற்ற பொங்கல்



வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் நிகழ்வையொட்டி முள்ளியவளை காட்டுவிநாயகர் கோவில் பொங்கல் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

கடந்த முதலாம் திகதி உப்பு நீரில் விளக்கெரிப்பதற்காக முல்லைத்தீவு சிலாவத்தை கடல் நீர் தீர்த்தம் எடுத்துவரப்பட்டு கடந்த ஏழு நாள்களாக முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலில் விளக்கு எரிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முதல் காட்டு விநாயகர் கோவில் பொங்கல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. பொலிஸார், படையினர், சுகாதார தொண் டர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள். வீதிகள் எங்கும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் கூட்டத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கோவில் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களால் அறிவித்தல் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தாலும் மக்கள் வழிபட்டு வருகின்றனர். (த-19)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இழுபடும் தேர்தல்

இந்தமுறை நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சகுனம் சரியில்லையோ என்னவோ, அடுத்த நாடாளுமன்றத்தை அவ்வளவு விரைவாகக் கூட்டுவதற்கு இடமளிக்காமல் இழுபாணி சப்பாணியாக காலம் விரயமாகிக் கொண்டிருக்கிறதே தவிர உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. புதிய நாடாளுமன்றுக்கான தேர்தல் அறிவித்த கையோடே கொரோனா பற்றிய அச்சநிலை உருவாகி, வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதும் ஒரேயடியாக நாட்டையே இழுத்துமூடும் (லொக் டவுன்) நிலை வந்துவிட்டது. சாவு பற்றிய அச்சத்தில் தேர்தலைப் பற்றி யார்தான் அக்கறைப்படுவார்கள்? அதனால் தேர்தல் நடவடிக்கைகளை மூடைகட்டி வைத்துவிட்டு, கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. ஆனால் அரசு கொரோனா காலத்தைக் கூட தனக்கான வாக்குவங்கியை அதிகரிக்கும் பரப்புரை நடவடிக்கை போலவே மாற்றியமைத்தது. எதிரணிக் கட்சிகள் கூட மக்கள் நலனில் அக்கறைப்பட்டுக்கொண்டிருக்க, உண்மையாகவே மக்களைக் காக்க வேண்டிய அரசோ கொரோனாவாவது, கோதாரியாவது என்று அதை ஓரம்கட்டிவிட்டு தேர்தலை நோக்கியே காய்களை நகர்த்தியது.

ஆயினும் தேர்தல்கள் ஆணைக்குழு, மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதாரத் துறை என்பன கொரோனாக் காலத்தில் தேர்தலை வைக்கக் கூடாது என்று அழுங்குபிடியாக நின்றதல், அரசால் நினைத்தபடி தேர்தலை உரிய காலத்தில் வைக்கமுடியவில்லை. ஒவ்வொருமுறையும் அது தள்ளிக் கொண்டே போனது. இந்த நிலையில் தான் இப்போதைக்கு கொரோனாவை இலங்கையில் இருந்து துரத்தியடிக்க முடியாது, பேசாமல் கொரோனாவோடு வாழப்பழகுங்கள் என்ற ரீதியில் இலங்கையை இயல்புநிலைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தியது. ஏனெனில் இலங்கை இயல்புக்கு வந்துவிட்டதாகக் காட்டினாலே தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு, சுகாதாரத்துறை என்பன பச்சைக்கொடி காட்டும் நிலை உருவாகும். இல்லாவிட்டால் கொரோனாவைச் சாக்காக வைத்தே இன்னும் சில மாதங்கள் இழுத்தடித்தால், கொரோனாக் காலத்தில் அரசு செய்த உதவிகளை மக்கள் மறந்துபோவதோடு, கொரோனாவால் உண்டான பொருளாதாரப் பாதிப்புகளை அப்போது அனுபவிக்கும் நிலையும் ஏற்படுமென்பதால், எவ்வளவுக்கு தேர்தல்தள்ளிப்போகின்றதோ அவ்வளவுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற கோத்தா அரசின் கனவும் நழுவிச் சென்றுவிடும். எனவேதான் எப்பாடுபட்டாவது தேர்தலை நடத்துவது என்று அரசு கங்கணம் கட்டியது.

அதற்கும் ஆப்பு வைப்பது போல நாடாளுமன்றைக் கலைப்பது தொடர்பான வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுக்கள் போடப்பட்டன. இதனால் மீண்டும் தேர்தலை நடத்துவதில் தேக்கநிலை ஏற்பட்டது. ஆனால் மிக நீண்ட விசாரணையின் பின்னர் அந்த மனுக்களை எவ்வித காரணமும் சொல்லாமல் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் மீண்டும் தேர்தலுக்கான சூழல் கருக்கொண்டது. ஆனாலும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கதையாக நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் விரைவிலேயே தேர்தலை நடத்தலாம் என்றிருந்த அரசுக்கு, ஆணைக்குழு இப்போது ஒவ்வொரு தடைகளாகப் போட்டுக் கொண்டு வருகின்றது.

முதலில் உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையைக் கேட்ட பின்னரே தேர்தல் எப்போது எனத் தீர்மானிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அப்படி பரிந்துரைகள் எல்லாம் வந்துசேர ஓகஸ்ட் மாதம் கடந்துவிடும். இருப்பினும் எப்படியும் ஓகஸ்ட்டுக்குள் தேர்தலை வைத்துவிடுவோம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய உறுதியாகச் சொன்னார். ஆனால் இப்போதோ கொரோனாவைத் தடுக்கும் வகையில் கிருமி நீக்கம், கை கழுவுதல், வாக்காளர்களுக்கு அடையாள மையை ஸ்பிறே பண்ணுதல், தனியாள் இடைவெளி பேணியபடி வாக்களிக்க வரிசையில் நிற்றல், தேர்தல் கடமையில் ஈடுபடுவோருக்கு உரிய பாதுகாப்பு அங்கிகளைப் பெற்றுக்கொடுத்தல், வழக்கத்தை விட இரட்டிப்பான ஆளணியினரைப் பயன்படுத்தல் என்பன போன்ற புதிய நடைமுறைகள் இம்முறை தேர்தலில் கொண்டுவரப்படவுள்ளதால், ஒரே நாளில் வாக்களிப்பை நிறைவு செய்ய முடியுமா என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சந்தேகம் வந்துள்ளது. எனவே இரண்டு கட்டங்களாகத் தேர்தலை நடத்த ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. எனினும் தேர்தலை ஒன்றுக்கு மேற்பட்ட நாள்களில் நடத்த சட்டத்தில் இடமில்லை. ஒரேநாளில் நடத்துவதா, இரு கட்டமாக நடத்துவதா என்பது தொடர்பில் தெளிவான முடிவை எடுத்த பின்னரே தேர்தல் திகதியை தீர்மானிக்க முடியுமென்பதால் தேர்தல் இன்னும் தள்ளிப்போகவே அதிகவாய்ப்புள்ளது. இனியும் என்ன முட்டுக்கட்டைகள் வந்து தேர்தல் தள்ளிப்போகப் போகின்றதோ என்பதெல்லாம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே வெளிச்சம்.

### பொதுப் போக்குவரத்தில்

# சுகாதார விதிமுறைகளை புறக்கணிப்பதாக முறைப்பாடு

## சாரதி, நடத்துனர்கள் கைதாவர் என்று அனில் ஜாசிங்க எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 8**

**கொரோனா மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் காணப்படுகின்றது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், பொதுப் போக்குவரத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். சுகாதார விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், கொரோனா மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் காணப்படுகின்றது. அதன் பாதிப்பு உலக நாடுகளில் ஏற்பட்டது போன்று மோசமாக இருக்கக்கூடும்.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் சுகாதார விதிகள் முறையாகச் செயற்படுத்தப்படவில்லை என்று பல்வேறு தரப்பினர்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் சமூக இடைவெளி குறித்த சட்டத்தை மீறுகின்றனர் என்று சுகாதார அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதுபோன்ற சட்டங்களை மீறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது - என்றார். (ஒ.எ,22)

# தனிமைப்படுத்தல் மையத்தில் நான்கு பேருக்கு கொரோனா

வவுனியா, ஜூன் 8

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் முகாம் மற்றும் பெரியகாடு தனிமைப்படுத்தல் முகாம் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டிருந்த நான்கு பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாம் சிப்பாய்களுக்கு கொரோனோ இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த முகாமில் கடமையாற்றிய கடற்படையினர் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா பம்பைமடு, பெரியகாடுப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு கடற்படையினர் மற்றும் அவர்களது உறவினர்கள் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அங்கு தங்க வைக்கப்பட்டிருப்பவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினமும், நேற்றும் கிடைக்கப்பெற்ற பரிசோதனை முடிவுகளின்படி 4 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ.ப,110)

# மழை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 8

நாட்டின்தென்மேற்கு பகுதியில் அடுத்த சில நாள்களில் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 2மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கொழும்பு, ஜூன் 8

மொனராகல படல்கும்புர நீர்தேக்கத்தில் நீராடச்சென்ற 7 வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். தனது குடும்ப உறுப்பினருடன் நேற்றுமுன்தினம் மாலை நீராடச் சென்ற போது விபரீதம் நடந்துள்ளது. (ஒ.க)

# பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் தமிழர் கொண்டிருக்க வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 8

**தமிழினமே, உங்கள் சிந்தனையை நீட்டுங்கள், தமிழர்கள் வடக்கு, கிழக்கில் காக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிப் போராட்டங்களில் கலந்துகொண்டு அண்மையில் உயிரிழந்த தந்தை ஒருவருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

இன்று எங்கள் தலைவர் ஐயா நல்லதம்பிக்கு கடைசி வணக்கம் செலுத்த நாங்கள் இங்கு சேர்ந்துள்ளோம்.

அவரது இறப்பால் நாங்கள் மிக வருத்தப்படுகிறோம். அவர் எங்களை விட்டு மிக விரைவில் விலகி விட்டார். அவர் எங்கள் போராட்டத்தின் வலுவான ஆதரவாளர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் தனது மகனைக் கண்டுபிடிப்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். 2008 இல், அவரது மகன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்தவுடன் வெள்ளை வான் கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டார். அவரின் மகனுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்கும் ஐயாவுக்கும் தெரியாது. அவர் நீதித்துறை மற்றும் கடத்தல்காரர்கள் இரண்டையும் குற்றம் சாட்டினார். அனைவரும் ஒன்றாக வேலை செய்து தனது மகனைக் கடத்தினார்கள் என்றார்.

தனது மகனின் கடத்தல் அத்தியாயத்திற்குப் பிறகு, அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் எங்களுக்கு உதவ அழைப்பதே ஒரே வழி என்று ஐயா நல்லதம்பி கூறினார். இலங்கை அரசாங்கத்துடன் பேசுவது நம்மை மேலும் மேலும் முட்டாளாக்குகிறது என்றார்.

நாம் அனைவரும் அறிந்தபடி, கடந்த ஏழு தசாப்தங்களாக, தமிழர்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்ட போது, ஒரு சிங்களவர்கூட தமிழர்களின் கொலையை நிறுத்தும்படி ஆர்ப்பாட்டம் செய்ததை நாங்கள் காணவில்லை. 2009 ஆம் ஆண்டில், முள்ளிவாய்க்காலில் ஒருலட்சத்து 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர், தமிழர்களின் வெகுஜன கொலைகளைத் தடுக்க எந்தச் சிங்களவர்களும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை.

தமிழினமே, உங்கள் சிந்தனையை நீட்டுங்கள், தமிழர்கள் வடகிழக்கில் காக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை பற்றி மூளைச்சலவை செய்யுங்கள்.

பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயகத்தை உருவாக்குவதால், நாங்கள் எங்கள் நிலத்தைப் மீளப் பெற முடியும் மற்றும் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து எம்மால் சுதந்திரம் பெற முடியும் - என்றனர். (ப-110)

# சிவில் சட்டங்களை மதிக்காது இயங்கும் கோத்தா, மஹிந்த!

## துஷார இந்துனில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 8

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் சிவில் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

துறைசார் தேர்ச்சி பெற்றவர்கள் ஊடாக முன்னெடுக்க வேண்டிய பிரிவுகளுக்கு இராணுவத்தினரை நியமித்து வருவது இராணுவ ஆட்சிக்கு வித்திடுவதாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்க சட்ட விதிகளை அரசு மீறி வருகின்றது. அமெரிக்க இராஜதந்திரி தொடர்பிலும் அக்கறையின்றி இருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இராணுவ ஆட்சிக்கு வித்திட்டு வருகின்றார். நிர்வாகத்துறை, வெளிநாட்டு விவகாரம், பொருளாதார முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு பரீட்சைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அந்த துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை விடுத்து இராணுவத்தினரை அவற்றில் அமர்த்துவது இராணுவ ஆட்சியை முன்னெடுப்பதற்கான நோக்கமாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்க சட்ட விதிமுறைகளை மீறி அரசு செயற்பட்டு வருவதை அண்மையில் அவதானிக்கமுடிகின்றது. அவர்களது செயற்பாடுகளின் காரணமாக இவ்வளவு நாளும் கொரோனா வைரஸ் தொடர்பில் ஊடக முன்னிலையில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட செயலணியினரும் அமைதி காத்து வருகின்றனர்.

அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்தில் கொள்ளாது அவர் இஷ்டம்போல நாட்டுக்குள் வந்துள்ளார். கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கம் அமெரிக்காவுக்குதுணை போவதாக தெரிவித்து வந்த அமைச்சர்களான விமல் வீரவன்ச , உதய கம்மன்பில ஆகியோர் தற்போது எங்கே?. இந்த அமெரிக்க இராஜதந்திரி தொடர்பான விவரங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம்தானே?. தற்போது ஏன் அமைதியாக இருக்கின்றார்கள்?- என்றார். (எ)



# லொறி குடைசாய்ந்து ஒருவர் பரிதாபச் சாவு

பசறை, ஜூன் 8

பசறை நகர மத்தியில் லொறி ஒன்று வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 ஓட்டோக்களும் சேதமடைந்தன.

கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த குறித்த லொறி நேற்றுமுன்தினம் இரவு பசறை நகரில் தரித்திருந்து நேற்றுக் காலை புறப்படத் தயாராகியுள்ளது. இதன்போது லொறியின் எஞ்சின் இயங்க மறுத்தமையால் லொறியை சிலர் தள்ளி இயங்கச் செய்ய முயற்சித்துள்ளனர். சுமார் 600 மீற்றர் வரை லொறி தள்ளப்பட்ட நிலையில் திடீரென குடை சாய்ந்து விழுந்துள்ளது. இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். நான்கு ஓட்டோக்கள் சேதமடைந்தன. (ம)

## கொரோனா இயல்பு நிலை;

# நிந்தவூர் கடற்கரைக்கு மக்கள் படையெடுப்பு

அம்பாறை,ஜூன் 8

நாட்டின் முடக்க நிலை தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து அம்பாறை மாவட்டத்திலும் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்பி வருகின்றனர். அண்மைக்காலமாக நிந்தவூர்ப் பிரதேச கடற்கரைப்பகுதிக்கு பொழுது போக்கிற்காக குடும்பம், குடும்பமாக வருகை தந்த உள்ளூர் மற்றும் அயல்பிரதேச பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வருகை கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாகத் தடைப்பட்டிருந்தது. எனினும் தற்சமயம் ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாட்டின் முடக்கம் சுமூக நிலை மைக்கு வந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வரும் நிலையில் நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்திற்கு பொழுது போக்கிற்காக வருகை தரும் பொதுமக்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் வேளைகளில் நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தை பொழுதுபோக்கிற்காக அயல்பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களும் பெருமளவில் நாடிவருவதும் குறிப்பிடத்தக்கது. மேற்படி தினங்கள் உட்பட ஏனைய தினங்களில் உள்ளூர்வாசிகளும் பெருமளவில் வருகை தருவதும் வழக்கமாகி வருகின்றது.

நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்துக்கு பொழுதுபோக்கிற்காக வருகை தரும் பொதுமக்களின் நலன் கருதி தமது எண்ணக்கருவிற்கமைய நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளரும், தற்போதைய திகாமடுல்ல தேர்தல் மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளருமான எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர் முன்னெடுத்த திட்டத்திற்கமைய கடற்கரைப் பிரதேசத்தில் ஆசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ப-30)

# இங்கிலாந்தில் சிக்கிய 278 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,ஜூன் 8

கொரோனா வைரஸ் தொற்றால் இங்கிலாந்தில் சிக்கித் தவித்த 278 இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸிற்கு சொந்தமான, விசேட விமானம் மூலம் இவர்கள் இங்கிலாந்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். (ஐ)



# வீதி சீரமைப்பு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 2மில்லியன் ரூபா செலவில் இரண்டு உள்ளக வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. 420 மீற்றர் வரையான வீதிகளே இவ்வாறு சீரமைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-113)

# ஐ.தே.கவின் செயற்குழு கூட்டம் இன்று

கொழும்பு.ஜூன் 8
ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகி ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளித்தோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளது.

இந்த மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.

இதன் போது கட்சியாப்பை மீறிச் செயற்படும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலாளர் நிஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்,

அன்றைய தினம் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா இல்லை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதா என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (க)

# பாடசாலை மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதித் திட்டம்

## மீள நடைமுறைக்கு வந்தது

கொழும்பு, ஜூன் 8
பாடசாலை மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், இதுவரை சுரக்ஷா காப்புறுதி திட்டத்துக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள், உரிய முறையில் விண்ணப்பத்தை பூர்த்திசெய்து வலயக் கல்வி காரியாலயம் அல்லது கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சுரக்ஷா காப்புறுதி திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கு 0112784163, 0112784872 அல்லது 011 3641555 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொள்ளலாம்.

சுரக்ஷா காப்புறுதி திட்டத்தின் ஊடாக மாணவர்களின் அவசர சிகிச்சை, பெற்றோர்களின் உயிரிழப்பு போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் காப்புறுதியின் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போதும் காப்புறுதியின் பயன்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# நெல்லியடியில் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூன் 8
நெல்லியடி நகர்ப் பகுதியை அண்மித்துள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 'சீல்' வைக்கப்பட்டது.

குறித்த சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணிபுரிந்தவர் முகக்கவசம் இன்றி பணிபுரிந்தமை மற்றும் தாடி ஒதுக்கியமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் 14 நாள்கள் நிலையத்தை திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டதுடன், குறித்த சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் தடை விதிக்கப்பட்ட நாள்களில் பணிபுரியக்கூடாது என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (து)

# குளவிகளின் தாக்குதலில் எண்மர் காயம்

கொழும்பு, ஜூன் 8
அக்கரபத்தனை, டயகம தோட்ட 05ஆம் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில் எட்டுப் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள்வர்களில், 7 பெண்களும் ஓர் ஆணும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேயிலைச் செடிக்கு அடியில் கட்டப்பட்டிருந்த, குளவிக்கூடொன்று, தேயிலைச் செடி அசைவால் கலைந்த போது அதிலிருந்து வந்த குளவிகளே இவர்களைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் டயகம பிரதேச பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ப)

# குடமுருட்டிப் பாலத்தால் அச்சமின்றி பயணிக்கலாம்

கிளிநொச்சி, ஜூன் 8
குடமுருட்டிப் பாலத்தின் ஊடாக மக்கள் அச்சமின்றி பயணிக்கமுடியும் என்று கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி தொழில்நுட்பப் பிரிவினர் தெரிவித்தனர்.

குடமுருட்டிப் பாலத்தின் இரும்புகள் கடந்தமாதம் திருடப்பட்டதாக தெரியவந்ததையடுத்து அதனூடான போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. எனினும் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் பாலம் சீரமைக்கப்பட்டது. இதனால் இனி இந்தப் பாலத்தினூடாக கனரக வாகனங்கள் பயணிக்கமுடியும் எனவும் மக்கள் போக்குவரத்தை அச்சமின்றி மேற்கொள்ளலாம் என்றும் கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி தொழிநுட்ப உத்தியோகத்தர் மோறாயிஸ் தெறிவித்துள்ளார். (ப-113)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு .சிவசிதம்பரத்தின் 18ஆவது நினைவு தினம், நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் உள்ள அன்னாரின் சிலையடியில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. (க-173)

# கும்பாபிஷேகத்தின் பின்னரே அடுத்த வருட பெருந்திருவிழா

தென்மராட்சி,ஜூன் 8
கொரோனாத் தொற்று காரணமாக யாழ்.மாவட்டத்தில உள்ள இந்துக்கோயில்கள் கொடியேற்றம் இடம்பெறாமல் அலங்காரத் திருவிழாவாக நடத்தப்படுவதால், கும்பாபிஷேகம் செய்த பின்னரே அடுத்த வருடம் கொடியேற்றத்துடன் தேர்,தீர்த்த திருவிழா நடத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக கோவில்களில் பொதுமக்கள் அதிக அளவில் கூடுவதைத் தவிர்க்கும் முகமாக கொடியேற்றத்துடன், திருவிழா நடத்த சுகாதாரத் திணைக்களத்தினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர். பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் சில கோவில்களில் பெருந்திருவிழாவை அலங்காரத் திருவிழாவாக நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெருந்திருவிழா நடத்தப்படும் இந்துக் கோவில்களில் திருவிழா நடத்தாமல்விடின், கும்பாபிஷேகம் செய்த பின்னரே மீண்டும் கொடியேற்றம் இடம் பெறவேண்டுமென்று இந்து மதக் கோட்பாடுகள் தெரிவிக்கின்றன.

இந்த வருடப் பெருந்திருவிழா நடத்த அனுமதி வழங்கப்படாததால் சுகாதாரத் திணைக்களத்தினரின் அனுமதியுடன் கொடியேற்றம் மற்றும் தேர், தீர்த்த திருவிழாக்களை நடத்தும் கோவில்களில் வருடாந்த திருவிழா நடைபெறும் தினங்களை உள்பிரகார அபிஷேகத்துடன் திருவிழாக்கள் குறைந்த அளவு உபயகாரர்களுடன் நடத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக குருமார்களிடம் கேட்ட போது, இந்து மதக் கோட்பாட்டின் பிரகாரம் அடுத்த வருட திருவிழாவுக்கு முன்னர் கும்பாபிஷேகம் செய்த பின்னரே பெருந்திருவிழாவின் கொடியேற்றம் தேர், தீர்த்த திருவிழா நடத்த முடியுமென்று தெரிவித்தனர். (க-9)

# ஸ்கானிங் கதிர்வீச்சுப் பிரிவுக்கான இரு மாடிக் கட்டடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 8
அங்கொடை தேசிய தொற்றுநோய்கள் நிறுவனத்தில் கணினி மயமாக்கப்பட்ட ஸ்கானிங் கதிர்வீச்சு பிரிவுக்காக (CT Scanner Unit) கடற்படையின் பங்களிப்புடன் இரண்டு மாடிக் கட்டடம் அண்மையில் அதிகாரபூர்வமாக குறித்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு முதன்மை கவனிப்பை வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கும் அங்கொடை தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்திற்கு நீண்டகாலத் தேவையாக இருந்த கணினி மயமாக்கப்பட்ட ஸ்கானிங் கதிர்வீச்சு இயந்திரம் (CT Scanner) சுகாதார அமைச்சகம் மூலம் வழங்க முடிவு செய்யப்பட்ட பின்னர் ஸ்கானிங் கதிர்வீச்சுப் பிரிவுக்கான கட்டடம் கடற்படையின் பங்களிப்புடன் கட்டப்பட்டு மருத்துவ உபகரணங்களை நிறுவுவதற்காக வைத்தியசாலை ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடத்தில் கணினி மயமாக்கப்பட்ட ஸ்கேனிங் கதிர்வீச்சு இயந்திரம் நிறுவப்பட்ட பின்னர், கணினி மயமாக்கப்பட்ட ஸ்கானிங் கதிர்வீச்சுப் பிரிவு வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# அனுமதியின்றி மணலேற்றிய இருவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஜூன் 8
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கிரவல் மண்ணை ஏற்றிச்சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டிக்குளம் பகுதியில் ஊரடங்கு காலப்பகுதியில் ஊடரங்கு சட்ட விதிமுறைகளை மீறியதுடன் அனுமதியின்றி கிரவல் மண்ணை ஏற்றிச் சென்ற இரு டிப்பர் வாகனங்களை ஓமந்தை பொலிஸார் கையகப்படுத்தியுள்ளதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நேற்றுமுன்தினம் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இரு வாகனங்களும் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (ம-18)



# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி நிறுத்தம் என்பது வதந்தியே!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 8**

**வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை. விரைவில் சுமார் ஆறு மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு முடிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

6 இயந்திரங்களில் 5 இயந்திரங்களின் மூலம் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும்பணிகள்நடக்கின்றன. ஒரு இயந்திரத்தில் அச்சிடும்போது, மாவட்டம் ஒன்றின் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட முரண்நிலையால், அதைப் பரிசீலிப்பதற்காக அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

எனினும் அதுவும் தற்போது அச்சிடுவதற்காகத் தயார்ப்படுத்தப்படுகின்றது. அரச அச்சகமா அதிபரின் கருத்துக்கு அமைய, விரைவில் 6 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நிறைவடையும். வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்படவில்லை - என்றார். (எ)

# அடிப்படைவாதத்தால் பிரச்சினைகள் தீரா!

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 8

நாட்டின் அனைத்து விடயங்களுக்கும் அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, தேசிய வீரர்கள் தினத்தில் ஆற்றிய உரையின்போது சர்வதேச அழுத்தங்கள் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புகளிலிருந்து வெளியேற தயங்கப்போவதில்லை என்று கூறியமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என்று வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டினுள் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் அழுத்தங்களை அளித்தால் அவற்றுக்கான தீர்வுகளை காண முயலவேண்டும். அவற்றை ஒளித்து மறைப்பதால் பயனில்லை. நடைபெறாத விடயங்களைக் கூறினால் ஜனாதிபதி கூறும் நிலைப்பாட்டில் இருப்பதில் தவறில்லை.

சர்வதேச நாணய நிதியம், நிதியுதவி அளிக்க வேண்டுமாயின் நிபந்தனைகளை விதித்து அவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென கோரினால் அது தவறாகவே அமையும். அதேநேரம் நாட்டின் முன்னேற்றத்திற்கான நிபந்தனைகளாக இருந்தால் அவற்றை புறக்கணிக்கவும் முடியாது. ஆகவே இந்த இரண்டு நிலைப்பாட்டுக்கும் மத்தியில் தான் தீர்மானங்கள் உள்ளன.

இலங்கையை சர்வதேச குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதாக கூறப்பட்ட போதும் கடந்த ஐந்து வருடங்களில் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை. சர்வதேசத்துடன் இணைந்தே பயணிக்க வேண்டும். தனித்து செயற்படுவதால் எதனையும் செய்ய முடியாது. போரை நிறைவுக்கு கொண்டுவந்தது போன்று துப்பாக்கி மூலம் அனைத்தையும் நிறைவுக்குக் கொண்டுவர முடியும் என்ற அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை-என்றார். (எ)

## சித்தி விநாயகர் கல்லூரியில் சிரமதானம்

மன்னார், ஜூன் 8

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில், மாணவர்களின் பெற்றோர்களால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. எதிர்வரும் வாரங்களில் மூடப்பட்ட பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்கு திறக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுவதால், பாடசாலையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரி அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களும் சிரமதானத்தில் பங்கேற்றனர். (க-213)



## சுற்றுச் சூழல் தினத்தில்

# உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட 6 விடயங்கள்

கொடிகாமம், ஜூன் 8

கொவிட்19 தொற்றிலிருந்து பசுமைச் சூழலுக்கேற்ற விதத்திலும், ஆரோக்கியமாகவும் மீள்வதற்கான ஆறு எளிய படிகளை உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டுஉலக சுகாதாரநிறுவனம்அறிவித்துள்ளது.

நமது ஆரோக்கியம் சார்ந்துள்ள காற்று நீர் மற்றும் உணவின் மூலமாக இயற்கையை பாதுகாப்போம், வீடுகள் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு நீர் சுகாதார வசதிகள் சுத்தமான உறுதியான சக்தி மற்றும் காலநிலை மாற்றத்துக்கு ஈடு கொடுக்கும் தன்மை கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம். வளி மாசடைவதை குறைக்கக்கூடிய சக்தி வளங்களுக்கு மாறுவோம். அப்பொழுது கொவிட்19 ஐ வென்றதும் மக்களுக்கு தூயகாற்றை சுவாசிக்க முடியும், நிலையான ஆரோக்கியமான உணவு முறைகளை மக்களிடையே ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான ஆரோக்கியமான மலிவான உணவுகளைப் பெற உதவுவோம். நிலையான போக்குவரத்து முதற்கொண்டு ஆரோக்கியமான வீடுகள் வரை சுகாதார முறைப்படி திட்டமிடப்பட்ட நகரங்களை உருவாக்குவோம்.

சூழலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களுக்கு மானியங்களை வழங்குவதைத் தவிர்ப்போம் என்ற 6 விடயங்களையே சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (ப-159)

# வீடு அமைப்பதற்கு மரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கைதடி பகுதியில் வாழ்ந்து வரும் பொருளாதார நிலையில் பின்தங்கிய் குடும்பம் ஒன்றுக்கு வீடு அமைப்பதற்கு வேண்டிய மரங்கள் சார்ந்த மூலப்பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

புலம்பெயர் நாடொன்றில வதியும் அந்தோனிப்பிள்ளை ரொபின்சன் அமலதாஸ் என்பவரின் நிதியில் இருந்து கொள்வனவு செய்தே மேற்படி பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-9)

# யாழ். தொழிநுட்பக் கல்லூரியில் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரியில் இயங்கலை (ஒன்லைன்) மூலமான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ICT (NVQ4) -க.பொ.த.(சா/த)பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

Advancing career skills (ACS) க.பொ.த.(சா/த)பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

Developing Career Skills (DCS) ஆங்கிலம் -க.பொ.த.(சா/த)பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம்உட்படஆறுபாடங்களில்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அலுவலக நடைமுறைகள் தொடர்பான அறிமுகம் (produture in an office) க.பொ.த.(சா/த)பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி கற்கைநெறிகளை பயில விரும்புவோர் dtet.gov.lk எனும் இணையத்தினுள் சென்று இயங்கலை (ஒன்லைன்) application என்பதனை தெரிவுசெய்து அதனூடாக பயில விரும்பும் தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.மேலதிக விவரங்களுக்கு தொழிநுட்பக் கல்லூரியுடன் அல்லது 021222358/0212220028 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்புகொள்ளலாம் என்று கல்லூரியின் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் தெரிவித்தார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 8

மினுவாங்கொடை பகுதியில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடைப் பகுதியில் பல குற்றச்சாட்டுகளில் தேடப்பட்டு வந்த அங்குலான 'கொனாகோவில் ராஜா' என்ற சந்தேக நபரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் பொலிஸாருக்கும் இறந்த நபருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே அவர் இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# சுற்றிவளைப்பு; 437 பேர் கைது

கொழும்பு,ஜூன் 8



கொழும்பில் பல பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 437 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹெரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். மேல்மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றுள்ள இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது 408 இடங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது ஹெரோய்னுடன் 140 பேரும், கஞ்சாவுடன் 63 பேரும், போதைப்பொருளுடன் 15 பேரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள்மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமா?

**1979** ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரினால் குட்டிமணி இ தங்கத்துரை இ ஜெகன் என்ற போராளிகளுக்கு அரசியல் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கான நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கிலிருந்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கு வரை கடந்த 40 ஆண்டுகளாக பலநூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளுக்காக வாதாடியவரும், வாதாடிவருபவருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உதயன் வாசகர்களுக்காக பகிர்ந்து கொண்ட நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது

## விளக்குகிறார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா

நேர்காணல் : பிரமன்



**கே:** 2020ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விபரங்களை ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரனும் பிரதமர் மகிந்த ராஜபக்ச விடம் கையளித்துள்ளனர். இதனால் அரசியல் கைதிகள் பொதுத் தேர்தலுக்கு முன்னர் விடுதலையாகும் சாத்தியமுண்டென எண்ணுகிறீர்களா?

**ப:** அரசியல்விவகாரங்களில் முக்கியமான ஒன்று, சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாமிலும் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் பற்றிய விடயமாகும். இவ்விடயத்தில் தேர்தல்கள் வரும்பொழுது தேசிய கட்சிகள் பல வாக்குறுதிகளை வழங்குவதும் தேர்தலின் மூலம் பதவிக்கு வந்த பின்னர் அப்படிக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றாமல் கிடப்பில் போடுவதும் வழமையான செயல்பாடுகளே. அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் இதனையே செய்தன.

பயங்கரவாத ,அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாமிலும் நீண்ட காலங்களாக வாடும் அரசியல் கைதிகளின் விடயங்களைப் பொறுத்தவரை அவ்விவகாரம் தேர்தல் காலங்களில் அரசியலாக்கப்படுகின்றதே தவிர, அதில் சட்டம் தனது கடமையைச் செய்வதாகத் தெரியவில்லை

இந்தக் கைதிகளுக்கு எதிராக தேவையற்ற காலதாமதம் செய்யாமல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கில் கைதிகள் குற்றவாளியாகக் காணப்பட்டு கைதிகளுக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்பட்டிருந்தால் கூட தண்டனைக் காலம் முடிவுற்று கைதிகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே விடுதலை ஆகியிருப்பர் என்பதுடன் பேச்சுவார்த்தையும் அவசியமற்றதாயிருக்கும். ஆனால் இந்தக்கைதிகளின் விடயத்தில் வேண்டுமென்றே காட்டப்படும் நீண்ட காலதாமதத்துக்கு அரசியல் தலைமைத்துவங்களின் இலக்கு வைக்கப்பட்ட நோக்கங்களா அல்லது இக்கைதிகள் தமிழர்கள் என்பதாலா?என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

இந்நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான விடயங்கள் டக்ளஸ் தேவானந்தாவினாலும், சுமந்திரனாலும் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட நிலையில், தேர்தல்களுக்கான திகதியும் அறிவிக்கப்படவுள்ளது. ஆனால் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதோ அல்லது பேச்சுவார்த்தை நடத்தி தற்பொழுது சிறையிலும் தடுப்புக்காவலிலும் தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டிருக்கும் தண்டனை விதிக்கப்பட்ட, வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும், மற்றும் விளக்கமறியல் கைதிகள் என சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதையோ எதிர்பார்க்க முடியாது. அவ்வாறில்லாமல் விதிவிலக்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்களாயின் வழமைபோல வழக்குத் தாக்கல் செய்ய எந்தவித சான்றுகளும் இல்லாத விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சில கைதிகளும் மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெறும் அரசியல் கைதிகளில் சட்டமா அதிபரினால் கைதிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய சான்றுகள் இல்லாத சில கைதிகளின் வழக்குக்களையும் நீதிமன்ற விசாரணையிலிருந்து மீளப்பெற்று ஒரு சில கைதிகள் மட்டுமே விடுதலை செய்யப்படுவர் .

**கே:** தற்பொழுது சிறைச்சாலையில் எத்தனை அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்? இந்த அரசியல் கைதிகள் எத்தனை ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டுள்ளனர்?

**ப:** சிறைச்சாலைகளில் 90 அரசியல் கைதிகளும் மகர தடுப்பு முகாமில் ஒரு அரசியல் கைதியுமாக மொத்தம் 91 கைதிகள் அடைத்தும் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளதுடன் 1996 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 11 ஆண்டு தொடக்கம் 12, 13,17, 20,24 ஆண்டுகள் சிறையில் அடைத்துவைக்கப் பட்டுள்ளனர்.

**கே:** 91 அரசியல் கைதிகளில் எத்தனை கைதிகள் வழக்கு விசாரணைகள் முடிவடைந்து தண்டனையை அனுபவிப்பவர்கள்?

**ப:** மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் முடிவடைந்து தண்டனை அனுபவிப்பவர்கள் மொத்தம் 46 கைதிகள். இவர்களில் மேன்முறையீட்டு நீதிமன்றிலும் உயர் நீதிமன்றிலும் மேன்முறையீடு செய்த 29 கைதிகளின் மேன்முறையீடுகளின் இறுதித் தீர்ப்புக்கள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்களை ஒப்புறுதிப்படுத்தி அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. மிகுதி 17 கைதிகளினதும் மேன்முறையீடுகள் விசாரணையில் உள்ளன.

**கே:** 91 அரசியல் கைதிகளில் தண்டனை வழங்கப்பட்ட 46 கைதிகளுக்கு எவ்வாறான தண்டனைகள் வழங்கப்படுள்ளன?

**ப:** 2 கைதிகளுக்கு மரணதண்டனை, ஒரு கைதிக்கு இரட்டை மரண தண்டனை, 12 கைதிகளுக்கு ஆயுள் தண்டனை உட்பட 10 வருடத்திலிருந்து 20, 30,60,200 வருடங்களிலிருந்து 600 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**கே:** தற்பொழுது தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டிருக்கும் 91 கைதிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவையா?

**ப:** பயங்கரவாத அவசரகால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டவர்களில்பெரும்பாலான அரசியல் கைதிகள் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் அல்ல .விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கியவர்களும் சூழ்நிலைக் கைதிகளுமாவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யபட்டவர்களில் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட முக்கிய வழக்குகளான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷ, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய , முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கொலை முயற்சி வழக்கு, கலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்பு வழக்கு, மேஜர் முத்தலிப் கொலை வழக்கு, லெப்டினட் ஜெனரல் பாரமி குலதுங்க கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட அரசியல் கைதிகள் எனது வாதத்தின்பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் சில கைதிகளுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்பட்டிருப்பினும் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்களில் கைதிகளால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமே அதிகமான வழக்குகளில் அரச சான்றாக குற்றச்சாட்டுப் பத்திரத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பித்தக்கது

**கே:** எத்தனை கைதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றுகளில் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது?

**ப:** நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் 35 அரசியல் கைதிகளுக்கு எதிராக பல ஆண்டுகளாக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 7 ஆண்டுகளின் பின்னர் 2017 ஆம் ஆண்டு தை மாதம் 13ம் திகதி குலேந்திரன் ,ராஜ்மதாஸ், அஜந்தா என்ற மூவரும் கைது செய்யப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது .இந்த வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் முக்கிய அரச சாட்சியாக குற்றச்சாட்டுப்பத்திரத்தில் சட்டமா அதிபரினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த மூன்று கைதிகளுடன் மொத்தமாக 38 கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் நடைபெறுகின்றது.

**கே:** நீண்ட காலமாக வழக்கு விசாரணைகள் இன்றி விடுதலைப் புலிகள் அமைப்பினைச் சேர்ந்தவர்கள் என சந்தேகத்தில் எத்தனை கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?

(மறுபக்கம் பார்க்க)



**சிறைச்சாலைகளில் 90 அரசியல் கைதிகளும் மகர தடுப்பு முகாமில் ஒரு அரசியல் கைதியுமாக மொத்தம் 91 கைதிகள் அடைத்தும் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளதுடன் 1996 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 11 ஆண்டு தொடக்கம் 12, 13,17, 20, 24, 24, ஆண்டுகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.**

**ப:** நீண்ட காலமாக வழக்கு விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்ட கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுப் பத்திரங்கள் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு பல கைதிகளை விசாரணையின் பின்னர் நிரபராதிகள் என நீதிமன்றம் விடுதலைசெய்தது. சில கைதிகள் வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனை அனுபவிக்கின்றனர்.

2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸாரினால் வைத்தியர் எஸ். சிவரூபன் கைது செய்யப்பட்ட பின்னர் மேலும் சந்தேகத்தில் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து மொத்தமாக ஆறு கைதிகள் மட்டுமே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் . இவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடைபெறுவதாக பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

**கே:** 2015 ஆம் ஆண்டு சிறைச்சாலையில் 217 அரசியல்கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் நல்லாட்சி அரசினால் 109 அரசியல் கைதிகள் குறித்த பொறிமுறை மூலம் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றதே. உண்மையில் அவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்களா?

**ப:** அரசியல் கைதிகளில், மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைதிகளோ அல்லது விசாரணை முடிவடைந்து தண்டனை வழங்கப்பட்ட கைதிகளோ பேச்சுவார்த்தைகள் மூலம் விடுதலை செய்யப்படவில்லை. வழக்குத் தாக்கல் செய்ய எந்தவித சான்றுகளும் இல்லாத விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சில கைதிகள் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர்.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வந்த எந்த அரசும் தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் எனத் தன்னை அழைத்துக்கொண்ட அரசு,அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்து விட்டு 2015 ஆம் ஆண்டு தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதான நாடகத்தில் ஒரு பகுதியாக வழக்குத்தாக்கல் செய்ய எந்தவித சான்றுகளும் இல்லாத விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சில கைதிகளை எந்தவித நிபந்தனையின்றி நீதவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளில் 69 அரசியல் கைதிகளை பிணையில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்துவிட்டு 39 அரசியல் கைதிகளே 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்பட்ட 39 அரசியல் கைதிகளில் 25 அரசியல் கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் 14 கைதிகள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டனர். 2015 ஆம் ஆண்டு பிணை வழங்கப்பட்ட கைதிகள் இன்றும் நீதிமன்றம் வந்து செல்கின்றனர்.

**கே:** 2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் போது 217 அரசியல் கைதிகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சில அரசியல் கைதிகள் பிணையிலும், புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டும் விடுதலை செய்யப்பட்டார்கள் எனில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு மேல் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெறும் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்பட்டனரா?

**ப:** பயங்கரவாத, அவசரகால சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட ஒரு கைதி கூட பேச்சுவார்த்தைகளினால் விடுதலை செய்யப்படவில்லை.

**கே:** மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை முடிவுற்று தண்டனை வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் எவரும் ஜனாதிபதிகளினால் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவில்லையா?

**ப:** (1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடைபெற்ற வழக்குக்களில் மரண தண்டனை வழங்கப்பட்ட குட்டிமணியின் தண்டனையை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆயுள் தண்டனையாக மாற்றினார். பின்னர் 1983 ஆம் ஆண்டு இனவழிப்பு நடைபெற்ற பொழுது 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்படும்பொழுது குட்டிமணியும் வெலிகடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டதன் மூலம் அவருக்கு சட்டரீதியற்ற மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

(2) 2005ம் ஆண்டிலிருந்து 2015ம் ஆண்டுவரை 10 வருடங்களாக ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச ஒரேயொரு அரசியல் கைதிக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். 20 வருடகடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்ட ஊடகவியலாளரான திசநாயகத்துக்கே அந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது . அவர் விடுதலையின் பின்னர் அமெரிக்காவில் வசித்து வருகின்றார். இந்தக் கைதிக்காக நீதிமன்றில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

(3) இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் கிடையாது எனக்கூறிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால,தன்னை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றால் 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

(4) ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒரு தமிழ் அரசியல் கைதிக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவில்லை. ஆனால் யாழ்ப்பாணம் , மிருசுவிலில் மூன்று சிறுவர் உட்பட எண்மர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டகைதியான கோப்ரல் ரத்னாயவுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். அவ்வாறு அவர் தண்டனை வழங்கப்பட்டு நீண்ட காலமாக சிறையில் வாடும் 46 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வாரா?

**கே:** அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கு எவ்வாறான பொறிமுறைமைகள் கையாளப்படவேண்டும்?

**ப:** 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டிருப்பதால், எப்போது தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என எதிர்பார்த்து பல ஆண்டுகளாக காத்திருக்கும் அரசியல் கைதிகளை மூன்று விதமாகப் பிரித்துப் பார்க்க வேண்டும்

(1) தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகள்
(2) மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றக் கொண்டிருக்கும் கைதிகள்
(3) விசாரணைக்காக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள்

ஏனெனில் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினால் மட்டும் சகல அரசியல் கைதிகளையும் பிரதமர் சட்டரீதியாக விடுதலை செய்ய முடியாது. நிறைவேற்றுத்துறை, சட்டமாக்கல்துறை, மூன்றாவதாக நீதித்துறை ஆகிய மூன்று துறைகளும் இணைந்து அரசியல் ரீதியான முடிவை எடுப்பதன் மூலமே தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும் கைதிகள் மற்றும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் என சகலரையும் விடுதலை செய்வது சாத்தியமாகும்.

(1) மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் முடிவடைந்து தண்டனை அனுபவிப்பவர்கள் மொத்தம் 46 கைதிகள். இவர்களில் மேன்முறையீட்டு நீதிமன்றிலும் உயர்நீதிமன்றிலும் மேன்முறையீடு செய்த 29 கைதிகளின் வழக்குகளில் தீர்ப்புக்கள் அரசுக்கு சாதகமாக அமைந்தன. மிகுதி 17 கைதிகளினதும் மேன்முறையீடுகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தண்டனை வழங்கப்பட்ட கைதிகளைகளையும் தண்டனையின் பின்னர் மேன்முறையீடுகளை தாக்கல்செய்த கைதிகளையும் விடுதலை செய்வதானால் ஜனாதிபதி மட்டுமே அரசியலமைப்பின் பிரகாரம் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யலாம். வேறு எவ்வழியிலும் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பில் நீதித்துறைக்கோ அல்லது நிர்வாகத்துறைக்கோ சட்டரீதியான அதிகாரம் இல்லை.

(2) நாட்டிலுள்ள மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 38 அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதாயின் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெறும் வழக்குகளின் குற்றச்சாட்டுப்பத்திரங்கள் சட்டமா அதிபரினால் மீளப்பெறப்படும் பொழுது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படலாம்

(3) 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வைத்தியர் எஸ்.சிவரூபன், நகுலன், தனஸ்வரன், கிருஸ்ணராஜா, ஜதுர்சன் மற்றும் நிர்மலராஜ் ஆகிய ஆறு கைதிகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் . இவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடைபெறுவதாக பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளனர். இந்தக் கைதிகளுக்கு எதிராக வழக்கைத் தொடர்ந்து நடத்தவில்லையென பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவிப்பதன் மூலம் இந்த விளக்கமறியல் கைதிகள் நீதிமன்றால் விடுதலை செய்யப்படலாம். எனவே அரசியல் ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டால் மட்டுமே சகல கைதிகளினதும் விடுதலை சாத்தியமாகும்.

அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் பொழுது அந்தப் பேச்சுவார்தையில் அரச தரப்பில் அரசியல் கைதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல்செய்த சட்டமா அதிபர் அல்லது அவர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரி கலந்து கொள்வார். அரசியல் கைதிகள் சார்பில் பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் தரப்புக்கு அரசியல் கைதிகளான 91 கைதிகளினதும் வழக்குக்கள் சம்பந்தமாகவும் எவ்வகையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன, தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவை, என்னென்ன தண்டனைகள் விதிக்கப்பட்டன என்ற விடயத்திலும், நடைபெற்ற மற்றும் நடந்து கொண்டிருக்கின்ற வழக்குக்களின் முழு விபரமும், குற்றவியல் சட்ட அறிவும், கைதிகளின் வழக்குகளில் வாதாடிய அனுபவமும் மிகவும் முக்கியமானதாகும். இவ்விடயங்களில் குற்றவியல் சட்டத்தில் அறிவும் அனுபவமும் உள்ள சட்டத்தரணிகள் உள்வாங்கப்பட வேண்டும் .

மேற் கூறப்பட்டுள்ள பொறிமுறைகளைச் சரியான முறையில் கையாளவில்லையெனில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்றதுபோல குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்ய போதிய சான்றுகளின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளையும் மேல் நீதிமன்றில் விளக்கம் நடந்து கொண்டிருக்கும் வழக்குகளில் அரச தரப்பால் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத நிலையில் நீதிமன்றினால் விடுதலையாக யிருக்கும் சில கைதிகளும் மட்டுமே விடுதலைசெய்யப்படுவார்கள். இதனால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் தான் என்ற நிலையே ஏற்படும்.

# வீட்டுத்தோட்டம் அமைக்க 12,117 பேர் விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 8



'சௌபாக்கியா' வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு 12,117 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று வடக்கு மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

தற்போது அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'சௌபாக்கியா' வீட்டுத்தோட்ட உணவு உற்பத்தி வேலைத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சௌபாக்கியா வேலைத் திட்டமானது இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒன்று கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக விதைகள் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதே போன்று மாகாண விவசாய திணைக்களத்தினூடாகவும் விதைகள் மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திற்கென 10 ஆயிரம் விதைப் பைக்கற்கள் அதேபோல் ஏனைய மூன்று மாவட்டங்களுக்கும் 5 ஆயிரம் விதைப் பைக்கற்கள் என்ற அடிப்படையில் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. கொரோனா இடரைக் கருத்தில்கொண்டு உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்கும் விதமாக பலர் இந்த விதைகளைப் பெற்று வீட்டுத்தோட்டம் அமைக்க ஆர்வம்காட்டி வருகின்றனர் - என்றார். (ம)

## ஸ்ரீலங்கன் விமான உதவி ஊழியர்கள் 1000 பேர் நீக்கம்

கொழும்பு, ஜூன் 8

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் உதவி ஊழியர்களாக பணிபுரிந்த சுமார் ஆயிரம் பேரை தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளது.

இந்தத் தீர்மானம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை அமுலில் இருக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த 400 பேர் மற்றும் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட வேறு நிறுவனங்களில் தொழில்புரிந்த 600 பேர் இவ்வாறு தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (க)

## இலங்கையர் இருவருக்கு சிங்கப்பூரில் சிறை

கொழும்பு, ஜூன் 8

போலி ஆவணங்களை வைத்திருந்தமை தொடர்பில் இலங்கையர்கள் இருவருக்கு சிங்கப்பூரில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இலங்கையர்களான புஸ்பராஜ் கபில் (21) மற்றும் ராமசந்திரன் கிஷோ பிரசாத் (32) ஆகிய இருவருக்கே தலா 8 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி சிங்கப்பூர் கடவுச்சீட்டு மற்றும் போலியான சிங்கப்பூர் அடையாள அட்டை என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில், சிங்கப்பூர், டுவாஸ் சோதனைச்சாவடியில் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு ஆதரவளித்த குற்றச்சாட்டில் மற்றைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்கள் அகதி அந்தஸ்து கோரி கனடா செல்வதற்காக போலி ஆவணங்களை தயார் செய்திருந்தனர் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து, இருவருக்குத்தலா 8 மாதசிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## 1,350 போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 8

பேருவளை நகரில் நேற்று வீதிச் சோதனையில் ஈடுபட்டு வந்த பொலிஸார் இரு மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி சோதனையிட்ட போது, அவற்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட சுமார் 1, 350 போதை மாத்திரைகளைக் கைப்பற்றினர்.

சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும், மூன்று கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் 24, 32, 37 வயதான பேருவளை, வெலிப்பென்னை மற்றும் பிங்ஹேன பகுதியைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## சுகாதார நடைமுறைகளுடன் வழிபாட்டுக்கு அனுமதியுங்கள்!

### கொழும்பு பேராயர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 8



இறை வழிபாடுகளில் ஈடுபட அனுமதி வழங்குமாறு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா காரணமாக முடக்கப்பட்டிருந்த இலங்கை தற்போது வழமைக்கு திரும்பி வரும் நிலையில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளின் படி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் வழிபாட்டு நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

நாளாந்த ஆராதனைகளை நடத்தவும் அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் அடையாளம் காணப்பட்ட நாள் முதல் வீட்டிலிருந்தே பிரார்த்தனைகளை மேற்கொள்ளுமாறு கிறிஸ்தவ மக்கள் வேண்டப்பட்டிருந்ததற்கு அமைய மக்கள் செயற்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, தற்போதைய நிலைக்கு அமைய வரையறுக்கப்பட்ட மக்கள் தொகையுடன் தினமும் கிறிஸ்தவ தேவாலயங்களில் பிரார்த்தனைகளை நடத்த அனுமதி வழங்குமாறு பேராயர், ஜனாதிபதி மற்றும் அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவியதையடுத்து, நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இறை வழிபாட்டுத் தலங்களில் மக்கள் ஒன்றுகூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## பூசாவில் சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பை அதிகரிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 8

பூசா சிறைச்சாலையில் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை நிர்வாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறைச்சாலைக்குப் பயணம் செய்தமையைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் குற்றங்களில் தண்டனை பெற்றவர்கள் உட்பட கடுமையான குற்றவாளிகளை பூசா சிறைக்கு மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு சேறு பூசும் தேவை அரசுக்கு

### பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

பேராசிரியர் ஹூல் தெரிவித்துள்ள தனிப்பட்ட கருத்துக்களையும் செயற்பாடுகளையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய நிலைமையில் தேர்தல்கள் ஆணைக்குழு மீது சேறுபூச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத் தன்மையுடன் செயற்படவில்லை என்று கூற வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

இதனால், தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அல்லது பேராசிரியர் ஹூலில் ஏதாவது ஒரு குறையை, உயர்த்திப் பிடிக்கவே ஆளும் தரப்பு முயற்சி செய்து வருகிறது.

இந்த செயற்பாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத்தன்மையுடன் செயற்படுமானால், அது ஜனநாயகத்தை பாதுகாக்கும் வழிவகை என்பதே எமது நோக்கமாகும்- என்றார். (எ)

## இலங்கை வான்பரப்பில் மர்மமான உயிரினம்

கொழும்பு, ஜூன் 8

இலங்கையின் வான்பரப்பில் மர்மமான உயிரினம் ஒன்று சுற்றித் திரிவதாக கொழும்பு பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

தெளிவாக அடையாளம் காணப்படாத உயிரினம் ஒன்றே இவ்வாறு சுற்றித் திரிவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்த காணொலி ஒன்றும் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் இது எந்த வகை உயிரினம் என்பது குறித்து இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, நுவரெலியா உட்பட பல பிரதேசங்களில் குறித்த உயிரினம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)



# கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கிடையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ள மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பணிமனையில் வேட்பாளரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி.துரைராசசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா.உதயகுமார், பொறியியலாளர் மு.ஞானப்பிரகாசம், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இரா.சாணக்கியன், சட்டத்தரணி ந.கமல்தாஸ் என வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். இதன்போது தேர்தலுக்காக மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ப-150)

# ராஜபக்ஷக்களுடைய மடமாக கட்சியை மாற்றினார் ரணில்

## சாடுகின்றார் ரஞ்சித் மத்துகம பண்டார



கொழும்பு, ஜூன் 8

**ஐக்கிய தேசியக் கட்சியை அநாதை மடமாக்கி ராஜபக்ஷக்களின் உடன்படிக்கைகளுக்கு அமையச் செயற்படும் கட்சியாக ரணில் விக்கிரமசிங்க மாற்றிவிட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துகம பண்டார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றி இளம் தலைமையின் கீழ் கொண்டு வருவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான பற்றும் அக்கறையும் எமக்கு இன்றும் உள்ளது. நாம் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியாக அரசியலில் இணைந்து செயற்பட்டவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவமே சஜித் பிரேமதாசவை கூட்டணியின் தலைவராக்கியது.

அந்த கூட்டணியே இன்றும் செயற்பட்டு வருகின்றது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களுடன் உடன்படிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றார் என்ற சந்தேகமே இன்று எம் அனைவருக்கும் தோன்றுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை நாசமாக்கிக் கட்சியை அனாதை மடமாக மாற்ற வேண்டும். ராஜபக்ஷக்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் செயற்பட்டு வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று இளம் தலைமைத்துவமே தேவைப்படுகின்றது. தலைமைத்துவம் மாற்றப்பட்டு சகலரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இன்று ஓர் அணியாக ஒன்றிணைந்து சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தில் இயங்க தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் அனைவருமே செயற்பட்டு வருகின்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியையும் முழுமையாக எமது கட்சியாக்க வேண்டும். இளம் தலைமைத்துவத்தின் கீழ் கட்சியை வழிநடத்த வேண்டும்.

பொதுத் தேர்தலின் பின்னர் இந்த மாற்றங்கள் நிச்சயமாக இடம்பெறும். ஐக்கிய தேசியக் கட்சியும் எமது கட்சியாகும் . சஜித் பிரேமதாசவின் கீழ் கட்சியை வழிநடத்துவோம். வெகுவிரைவில் ஐக்கிய தேசியக் கட்சியை நாமே கைப்பற்றுவோம். தூய்மையான தலைமைத்துவமும் மக்கள் நலன்களை கருத்தில் கொண்டு செயற்படும் உறுப்பினர்களும் எம் தரப்பில் உள்ளனர். நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக அமருவோம். அதேபோல் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியையும் எமது கட்சியாக்குவோம்- என்றார். (எ)

*வேட்டைக்குச் சென்றவர்*

# துப்பாக்கி வெடித்து உயிரிழந்த பரிதாபம்

கொழும்பு,ஜூன் 8

பொலன்னறுவை, வஸ்கமுவ தேசிய பூங்காவில் நேற்றுமுன்தினம் துப்பாக்கியொன்று தற்செயலாக வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவை, கலஹக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது நண்பர்கள் இருவருடன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, வஸ்கமுவ தேசிய பூங்காவில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக புறப்பட்டுச் சென்றுள்ளார்.

உயிரிழந்தவரின் கையிலிருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில், அவர் உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

# மேலும் 4 மாவட்டங்களில் வெட்டுக்கிளிகள் பரவல்



கொழும்பு,ஜூன் 8

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குருநாகல் மாவத்தகம பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் மேலும் 4மாவட்டங்களுக்கு பரவியுள்ளன என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகல், கேகாலை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலே இவ்வாறு பரவியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், பாலைவன வெட்டுக்கிளித் தாக்கம் தொடர்பாக வடக்கு மாகாண விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லையென வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார். (ஐ)



# கச்சான் அறுவடை விழா

மட்டக்களப்பு, ஜூன் 8

ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட விவசாயத்திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கையின் அறுவடை மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் நிலக்கடலை அறுவடை விழா கிரான் சேம்பையடி விவசாயக் கண்டத்தில் கி. பிரபாகரன் என்பவரின் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

விவசாயப் போதனாசிரியர் எம்.ஜமால்டீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களப் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் ஈ.சுகந்ததாசன், உறுகாமம் பிரிவு பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ். நிரோஜன், வாழைச்சேனை விவசாய போதனாசிரியர்களான எஸ்.சிரிகண்ணன், எச்.எம்.றியாழ், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.எம்.றிபாய்ஸ், வாகனேரி திட்ட முகாமையாளர் எம். தீபகாந், கிராம அலுவலர் சண்முகம் குரு, வாகனேரி திட்ட முகாமைத்துவக் குழுத் தலைவர் எஸ்.புஸ்பாகரன், விவசாய அமைப்பினர், கிராம மட்டப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-150)

# வெட்டுக்கிளித் தாக்கம் தொடர்ந்தால் பேராபத்து

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 8

தற்போது புதிய சவாலாக மாறியிருக்கும் வெட்டிக்கிளிகளின் தாக்கம் தொடருமாக இருந்தால் ஏற்கனவே சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் வருமான மார்க்கம் பெரிதும் பாதிக்கப்படும்.

இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

வெட்டுக்கிளிப் பரவலைக் கட்டுப்படுத்த விரைவான நடவடிக்கை அவசியமாகும். கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு விவசாயத் துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது விவசாயிகளின் வருமானத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த நிலைமை தொடருமானால் விவசாயிகளின் வருமான மார்க்கம் பெரிதும் பாதிக்கப்படும். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் தடுத்து வைப்பதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும்-என்றார்.(எ)

## ஏ.எல்...

வறுத்தல்களைக் கவனத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சைக்கான திகதி தீர்மானிக்கப்படும் என்று ஆணையாளர் நாயகம் சனத் பூஜித நேற்றுத் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உயர்தரப் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பெரும்பாலும் செப்ரெம்பர் மாதம் பரீட்சை இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.ப)

## கொரோனா...

பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 835 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 50 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 941 ஆக உயர்வடைந்துள்ளது. (ஓ.5,22)

## பொதுத்...

கலந்துரையாடலில் இறுதித் திகதி ஒன்று அறிவிக்கப்படுமா என என்னால் கூற முடியாது. 8ஆம் திகதி கலந்துரையாடுகின்றோம் என்றே கூறினேன். 8 ஆம் திகதி வரையில் என்னால் கூற முடியாது அதன் பின்னர் கூறலாம் என்றேன். பிறக்க முன்னர் குழந்தை ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என கூற முடியாது. ஆனால் பெரும்பாலும் திகதி குறித்து தீர்மானம் எடுக்கலாம் என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன்' என்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னரே தேர்தல் திகதியை அறிவிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறி வந்தது. கடந்த செவ்வாய்க் கிழமை வழக்குகளை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மறுநாள் புதன் கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் இடம்பெற்றது. சுகாதார அதிகாரிகளுடன் அன்றைய தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது. ஆனால் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படவில்லை.

இன்று நடைபெறும் கூட்டத்திலேயே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்றைய தினமும் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அதேபோன்று உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தும் அறியப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாக பெரும்பாலும் இன்றைய தினம் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படாது என்று தெரியவருகின்றது.

இதேவேளை ஓகஸ்ட் 12ஆம் திகதி சர்வதேச இளைஞர்கள் தினம் அன்று தேர்தலை நடத்துவது தொடர்பிலும் ஆணைக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் அது இறுதி செய்யப்படவில்லை. (ஓ.5)

## காவடியை...

இன்று ஆலய பூசை வழிபாடுகள் சிறப்புற சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றுள்ளன.

படையினர், பொலிஸார் அதிகளவில் குவிக்கப்பட்டு சுகாதார பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆலய நிர்வாகத்தினர் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு அறிவிப்புக்களைச் செய்தனர்.

முள்ளியவளை மாமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் இருந்து பக்தர் ஒருவர் தூக்கு காவடி எடுத்துக்கொண்டு சென்ற போது வீதியின் இடைநடுவில் மறித்த பொலிஸார் காவடியை மறித்து அதில் நேர்த்திக்காகச் சென்றவரை இறக்கி அவரின் முதுகில் குத்தப்பட்டுள்ள செடில்களை கழற்டிவிட்டு திருப்பி அனுப்பியுள்ளனர். (ஓ.5,19)

## சிகிச்சை...

இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிடம் யோசனையொன்று முன்வைக்கப்படும் என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்காக இலங்கைக்கு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ.5)

## சங்கிலியன்...

மன்னாரை பூர்வீகமாகக் கொண்ட அதிபர் கடந்த புதன் கிழமை மன்னார் சென்று சனிக்கிழமை மாலையில் வீடு திரும்பியிருந்தார். இந்த நிலையில் வீடு உடைத்து களவாடப்பட்டிருந்தது தெரியவந்தது.

தோடு, மோதிரம், பென்ரன் உள்ளிட்ட இரு பவுண் தங்க நகைகளும், கைத்தொலைபேசி என்பனவும் களவாடப்பட்டுள்ளது. களவு தொடர்பில் சனிக்கிழமை மாலையில் அதிபரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கு அமைவாக பொலிஸார் நேற்றைய தினம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டனர். (ஓ.5,105)

## வாள்...

துள்ளனர். மோட்டார் சைக்கிள் ஒன்றும் வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டோரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் வரை சென்ற பழைய பகையின் பின்னணியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கச்சாய் வீதி கொடிகாமத்தை சேர்ந்த சுரேந்திரன் வெனிஸ்ரன் (வயது19), அவரது தந்தை வேலுப்பிள்ளை சுரேந்திரன் (வயது53) மற்றும் வெள்ளாம்போக்கட்டியை சேர்ந்த மகேந்திரன் அஜந்தன் (வயது-23) ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ.5,159)

## குழுவாகச்...

ஸாரால் நேற்று மாலை 5 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 10 சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளை முல்லையடிப் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். அவர்களில் புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஓ.5,6)

## மசகு...

இதனையடுத்து, மசகு எண்ணெய் விலை தற்போது 38 டொலரில் இருந்து 42 டொலர் வரை உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. (ஓ.க)

## 31ம் நாள் நினைவஞ்சலி



திரு. கந்தையா ஜோசப் குணசிங்கம்
(Rtd.Wharf clerk)

மண்ணில் 07.12.1932 — விண்ணில் 06.05.2020

06.05.2020 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவன்
திரு. கந்தையா ஜோசப் குணசிங்கம்
அவர்களின் 31ம் நாள் நினைவு தினம் இன்று (08.06.2020)
திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டத்தரணி,
திருமதி.அருள்மதி நேசரஞ்சன் (மகள்) மற்றும் குடும்பத்தினர்
அருளகம், வதிரி, நெல்லியடி வடக்கு.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுந்தரம் விநாயகமூர்த்தி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மண்ணில் 10.10.1938 — விண்ணில் 08.06.2010




பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் நாம்

விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 21 . 11 . 1934
விண்ணில் 09 . 05 . 2020

அமரர்
**முத்துவேலு சண்முகநாதன் (தவம்) J.P**
Ex. Writ உடையார் சமூக சேவையாளர்

கடந்த 09.05.2020 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் அவரது இல்லத்தில் இன்று (08.06.2020) திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சமயக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதே வேளை அமரர் நோயுற்றிருந்த வேளையில் உதவிய மருத்துவத் துறையினர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து சிறப்பித்தோர் மற்றும் பல வகைகளில் தொடர்புகொண்டு ஆறுதலளித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

அற்கின்சன் வீதி,
வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி - இராஜலக்சுமி
பிள்ளைகள் - கணேசகுமார், சரவணபவன், கௌரி, பவானி, ஸ்ரீபரன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொடர்பு இல:- 076 223 3096

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்-
தராக கடமையாற்றும் ஜெ. சதீஸ்குமார் அவர்களின்
பாசமிகு மனைவி

**சதீஸ்குமார் லிங்கேஸ்வரி**

அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
நல்லூர்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
450/=

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி சாம்பசிவம்



யாழ்ப்பாணம் கரம்பொன் மேற்கு அயித் தாம்புலத்தை பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரி சாம்பசிவம் கடந்த (04.06.2020) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தண்டா யுதபாணி யோகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரி யும். காலஞ்சென்றவர்களான சபாபதிப் பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சாம்பசிவம் (ஐயா - பரியாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தயாபரன் மற்றும் ஜெக தேவன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தியாகலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் Dr.தில்லை நாயகி. திருமூலநாதன். திலகவதி (இந்தியா). திருநாமச்சண்முகம் (ஜேர்மனி). தியா கேஸ்வரி (UK). திருமலைநாதன் (UK). திருக்கேதீஸ்வரநாதன்(UK). திருமலர் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீதேவி. காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் மலர்மகள். செல்வரட்ணம் (இந்தியா). கலாமதி (ஜேர்மனி). சக்திவேல் (UK). ஆனந்தி (UK). சத்திய நாதன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் யதீஜா. சிந்துஜா. கீதாஞ்சலி. புவிராஜ். சோபிகா. நிசாகரன். சுபிர்தா. ஆரூரன், கஜானன். வர்சனா, மதுசன். சாய்தா, பிரதீஸ். ஜனனி ஆகியோ ரின் அன்பு பேர்த்தியும் யாகவி. ஜக்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (05.06.2020) வெள்ளிக்கிழமை இந்தியா சென்னையில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்**

**021 222 1089 - மருமகள் - ஸ்ரீதேவி தியாகலிங்கம் - யாழ்ப்பாணம்.**
**+918 7544 57841 - மகள் - திலகவதி - இந்தியா**

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை குலேந்திரசிங்கம்

யாழ் வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் கொழும்பை வதிவிட மாகவும் கொண்ட சின்னத்துரை குலேந்திரசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (07.06.2020) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வீரகத்தி சின்னத்துரை மற்றும் அன்னலட்சுமி சின்னத்துரை அவர்களின் புதல்வனும், கந்தையா கனகசபை மற்றும் செல்லத்துரை பாக்யலட்சுமி ஆகி யோரின் மருமகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், சிவசுதன், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகணேஷ், சுகர்ணா ஆகியோரின் மாமாவும், இரகுநாதன், புவனேஸ்வரி, மற்றும் மகேஸ்வரி அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற சந்திரமௌலீசன் மற்றும் மகிழ்மலர், இராமச்சந்திரன், காலஞ்சென்ற சண்முகநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், அஜன், சாருகா, சகானா, விதுஜன் மற்றும் சேயோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (08-06-2020) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில் **Mahinda Funeral Parlour, Mount Lavinia** இல் பார்வைக்கு வைக்கப்பட்டு அதைத்தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**மகன் - சிவசுதன் - +614 0347 4145**
**மகள் - சிவாஜினி - +161 3302 6141**

**பணிப்பெண் தேவை**

நீர்வேலியில் வயோதிப தாயொருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
**தொடர்புக்கு:- 077 314 6013**

**ஓடுகள் விற்பனைக்குண்டு**

தரமான பழைய ஓடுகள் 3000 இற்கு மேல் மொத்தமாக விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 253 0865

**விற்பனைக்கு**

மிளகு கன்று. கொழும்பு வெற்றிலை மற்றும் பல இனக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:-077 612 9343**
**நியுலங்கா பாம்**
**பலாலி றோட் ஊரெழு மேற்கு**
**கணேசா பாடசாலைக்கு அருகாமை**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 02 • 06 • 1942 |  | 07 • 06 • 2020 |

## அமரர் நாகமணி ஆறுமுகம் கனகரத்தினம் (இராசதுரை)

Retired Income Tax Assessor – Sri Lanka, Senior Tax Inspector, Ministry of Finance - Oman
(ஓய்வுபெற்ற உள்நாட்டு இறைவரி திணைக்கள வரிமதிப்பாளர்)

யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள் 07-06-2020 ஞாயிறு அதிகாலை கொழும்பில் இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகேஸ்வரி அவர்களின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் இராசையா நல்லம்மா அவர்களின் அன்புமருமகனும் இராசமலர் அவர்களின் ஆருயிர் கணவரும் மேகலா (சுவிஸ்), மேனகா (சுதா – லண்டன்), அனுஷா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவசீலன் (சுவிஸ்), Dr. சிவமோகன் (லண்டன்), ஜெகரூபன் (DFCC Bank, Wellawatte) ஆகியோரின் அன்புமாமனாரும் வினோத், ஜீவன் (சுவிஸ்), வர்ஷா, குகேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்றவர்களான கிருபாதேவி, நல்லையா மற்றும் குணரத்தினம், காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, சகுந்தலாதேவி, மற்றும் அசோகமாலாதேவி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காந்திமலர், வசந்தமலர், மதியழகன், பண்பழகன், அருளழகன், தமிழழகன், கலையழகன், ஞானமலர் ஆகியோரின் அன்பு அத்தானும் காலஞ்சென்ற செல்வரத்தினம், மற்றும் இரத்தினமலர், தவமலர், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான ஜெயராமச்சந்திரன், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 08.06.2020 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணி முதல் மாலை 6.00 மணிவரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 09.06.2020 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று 12.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
ஜெகன்: 94-779229331 (இலங்கை)
சீலன் 0041-787074165 (சுவிஸ்)
Dr. சிவமோகன்: 0044-7960723927 (லண்டன்)

# 81 குடும்பங்களுக்கு நாற்றுக்கள் அன்பளிப்பு



வவுனியா, ஜூன் 8

வவுனியா மற்றும் நெடுங்கேணி வடக்கைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதார செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் வரோட் அமைப்பு விவசாய நாற்றுக்களை வழங்கியுள்ளது. கறிமிள்காய் தக்காளி வெண்டி மற்றும் மிளகாய் நாற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. நெடுங்கேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள மாறா இலுப்பை நெடுங்கேணி வடக்கு புளியங்குளம் வடக்கு/தெற்கு கனகராயன்குளம் வடக்கு/ தெற்கு மன்னகுளம் மற்றும் நைனாமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 81 பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(த-222)

# மரண அறிவித்தல்

## மனுவேல்பிள்ளை செபமாலை அம்மா



**தோற்றம்** 20.02.1939 — **மறைவு** 07.06.2020

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட மனுவேல்பிள்ளை செபமாலை அம்மா நேற்று (07.06.2020) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயந்தியின் அன்புத் தாயா ரும், குணசேகரத்தின் மாமியாரும், லதீன்(பிரான்ஸ்), தர்மி, கீதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.06.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ந.குணசேகரம் (மருமகன்)**
பனை,தென்னைவள அபிவிருத்திச் சங்கம்,
கோண்டாவில்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண-அழைப்பும்



தோற்றம்
27 . 12 . 1941

மறைவு
09 . 05 . 2020

### அமரர் இராசதுரை சறோஜினிதேவி

*பாரினில் எமை பக்குவமாய் பெற்றெடுத்து*
*பகலிரவாய் காத்திட்டே உதிரத்தை உரமாக்கி*
*வளர்தெடுத்த தெய்வமே !*
*உலகினில் உயர்வடைய ஊனினை உருக்கியவளே*
*வளமான வாழ்வு தந்து வளமுடன் வாழ்ந்திடவே*
*வாழ்த்திய தெய்வமே !*
*சடுதியில் எமைப் பிரிந்து சென்றதுமேன் சொல்*
*அப்பாவை தனிக்க விட்டு அகன்றதுமேன் சொல்.*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (09.06.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

165, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS'30270(04.77)

## மரண அறிவித்தல்



தோற்றம்
07 . 10 . 2004

மறைவு
03 . 06 . 2020

### ரமேஷ் ஹரிஷ்

நோர்வேயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ரமேஷ் ஹரிஷ் கடந்த (03.06.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ரமேஷ் சுதர்சினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சுபேஷ் அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் பரமேஸ்வரி மற்றும் குணநாயகம் (நோர்வே) காலஞ்சென்ற சந்திரலேகா தம்பதியரின் பாசமிகு பேரனும் லோகேஸ்வரன் (நோர்வே), வித்தியா (நோர்வே), ஜபர்(நோர்வே), திவ்யா (நோர்வே), செங்கையாழியன் (ஆசிரியர்-யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்), நித்யா (ஆசிரியை-யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), தேவராஜா (சுவிஸ்), சத்தியா (சுவிஸ்), விஜிந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் கேஷிகா, சுவேகா, டார்விஸ், டனிஸ்ரன், லிதர்சன், கோபிசன், இராகவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2020) திங்கட்கிழமை Bekkestua Norway இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரமேஸ் (தந்தை) - 0047 9019 2579
திவ்யா (மாமி) - 0047 9089 2695
அப்பம்மா - 021 221 1094
இந்திராணி - 021 221 1116

தகவல்:
திருமதி ச. பரமேஸ்வரி (அப்பம்மா)
திரு. திருமதி செங்கையாழியன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
05.09.1938

மறைவு
10.05.2020

அமரர்
### சுப்பிரமணியம் செல்லத்துரை

கடந்த (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்லைவர் அமரர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (07.06. 2020) ஞாயிற்றுக்கிழமை காலை 06 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (09.06.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோளெழு, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 . 08 . 1946

மறைவு
21 . 05 . 2019

### அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம் (பட்டு)

திதி :-சித்தம் திருதியை (08.06.2020)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததை
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனப் பிரார்த்திக்கின்றோம்.

41/52, வைத்தியசாலை முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.


மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
06.08.1938

மறைவு
06.06.2020

### வேலுப்பிள்ளை இராசரத்தினம்




ஊர்காவற்துறை புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத்தினம் கடந்த (06.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (லைட்) தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், டயனஸ்காந்தன் (கண்ணன்), டயலினி (டயா), இராஜசெழியன் (பாபு), சுதர்சினி (உஷா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுவேனி, காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் சந்திரகலா, செந்தில்ராஜ் ஆகியோரின் மாமனாரும், அபிலாஸ், அஷானி, அக்ஷயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவகடாச்சம் மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்றவர்களான மகாதேவா, நவரட்ணம் மற்றும் அமிர்தாதேவி, சிவசுப்பிரமணியம் புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2020) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய்,
(மகில்அடி ஒழுங்கை)

தகவல்: குடும்பத்தினர்
077 3413163, 077 618 1408



## சீனாவின் மற்றப் பகுதிகளுக்கு கொரோனா ஏன் பரவவில்லை?

### ட்ரம்ப் கேள்விக் கணை

வொஷிங்டன், ஜுன் 8

வுகானில் உருவான கொரோனா வைரஸ் சீனாவின் மற்றப் பகுதிகளுக்கு ஏன் செல்லவில்லை?. அது எப்படி நடந்தது? என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் சீனாவில் உள்ள வுகான் நகரில் முதன்முதலாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அங்கு நோய்ப் பரவல் தீவிரமடைந்து. சில வாரங்களில் பிற நாடுகளில் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொரோனா வைரஸை சீன வைரஸ் என்று கூறினார்.

வுகான் மருந்து ஆய்வுமையத்தில் இருந்து கொரோனா வைரஸ் பரவியதாக அவர் குற்றம் சாட்டினார். தவிர கொரோனா வைரஸ் பரவல் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அமெரிக்க குழுவை வுகானில் ஆய்வுசெய்ய அனுமதிக்க வேண்டும் என்று ட்ரம்ப் கோரினார்.

ஆனால் அவரது கோரிக்கையை ஏற்க சீனா மறுத்தது. கொரோனா தொடர்பாக எந்தத் தகவலையும் மறைக்கவில்லை என்றும், உரிய நேரத்தில் அனைத்து தகவல்களையும் முறையாக வழங்கி வந்ததாகவும் சீனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சீனா மீது ட்ரம்ப் மீண்டும் அதிரடி குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா உலக நாடுகளுக்கு சீனா வழங்கிய பரிசு. இது நல்லதல்ல. அவர்கள் நினைத்திருந்தால் கொரோனாவை உலகம் முழுவதும் பரவாமல் தடுத்து இருக்க முடியும். இதனைத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் மிக மோசமான பரிசை உலகிற்கு சீனா வழங்கி விட்டது. வுகானில் உருவான அந்த வைரஸ் மிக மோசமான பிரச்சினைகளை உருவாக்கியது. ஆனால் அது சீனாவின் மற்ற பகுதிகளுக்கு செல்லவில்லை. அது எப்படி நடந்தது. இதைத் தான் உலகம் கேட்கிறது - என்றார் ட்ரம்ப். (ம)

# உலக சுகாதார அமைப்புக்கு எதிராக பிரேசிலும் கொதிப்பு

## விலகுவோம் என்றும் எச்சரிக்கை

பிரேசிலியா, ஜூன் 8



**உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகுவோம் என்று எச்சரித்துள்ளது பிரேசில். 'உலக சுகாதார அமைப்பு ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்கின்றது' என்றும் பிரேசில் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் பிரேசில் அதிபர் போல்சனாரா மேலும் தெரிவித்ததாவது:

உலக சுகாதார அமைப்பு ஒருதலைப்பட்சமான அரசியலைச் செய்கின்றது. இந்தச் செயற்பாட்டை அந்த அமைப்பு நிறுத்திக் கொள்ளாவிட்டால் விரைவில் உலக சுகாதார அமைப்பில் இருந்து வெளியேறுவோம். உரிய முறையில் தகவல்களைத் தருவது போன்ற மிகப்பெரும் கடமைகளில் இருந்து உலக சுகாதார அமைப்பு தவறிவிட்டது' என்றார்.

முன்னதாக உலக சுகாதார அமைப்பு, 'பிரேசிலில் ஜுன் மாதம் கொரோனாத் தொற்று உச்சக்கட்ட அளவில் இருக்கும். அந்த நாட்டின் கொரோனாப் பரவல் தடுப்பு முறை இறுக்கமாக இல்லை' என்று தெரிவித்திருந்தது.

அத்துடன், பிரேசில் அதிபர் கொரோனா விடயத்தில் மெத்தனமாகச் செயற்படுகின்றார் என்று பிரேசிலுக்குள்ளேயே எதிர்ப்புக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# கொரோனா பலி 405,000!

வுகான், ஜுன் 8

கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 5 ஆயிரமாக அதிகரித்தது.

சீனாவின் வுகானில் தோன்றிய கொரோனா தற்போது உலகமெங்கும் பரவியுள்ளது. அண்மைக்காலமாக சராசரியாக 5 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் 4 ஆயிரத்து 250 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஒட்டுமொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 5 ஆயிரமாக அதிகரித்தது. (ம)



# கொரோனா பலிகளை மறைக்கிறதா பிரேசில்?

பிரேசிலியா, ஜுன் 8

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் பிரேசில் இரண்டாவது இடத்துக்குச் சென்றுள்ளது. அங்கு நாள்தோறும் பாதிப்பும், பலிகளும் அதிகரித்துவரும் நிலையில் கொரோனா பலிகளை பிரேசில் மக்களிடம் இருந்து மறைக்கின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரேசில் அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து கொரோனா பற்றிய சில உத்தியோகபூர்வத் தரவுகள் நீக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே இவ்வாறான குற்றச்சாட்டு அந்த அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)

# அமெரிக்காவில் சீர்திருத்தம் மிகமிக விரைவில் ஏற்படும்!

## இடம்பெறும் போராட்டங்கள் அதையே வெளிப்படுத்துகின்றன என்கிறார் ஒபாமா

கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்டின் இறப்புக்கு நீதிகோரி இடம்பெறும் போராட்டங்கள் அமெரிக்காவில் சமூகச் சீர்திருத்தம் ஏற்படத் தூண்டுகோலாக அமையும் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஒபாமா.

இனவெறிக்கு எதிரான போராட்டங்கள் குறித்து ஒபாமா மேலும் தெரிவித்ததாவது:

நீங்கள் முக்கியமானவர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் வாழ்க்கை முக்கியமானது. உங்கள் கனவுகள் முக்கியமானவை என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். கறுப்பின மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிக்கு எதிராக அமெரிக்கா முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களை அறிகிறேன். அமெரிக்கா அதன் அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான கொள்கைகளில் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும். பெரும் மாற்றத்தைக் கோரும் வரலாற்று நிகழ்வுகள் கடந்த வாரம் நம் நாட்டில் அரங்கேறின. மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சூழல் சமூகத்தில் பெரும் தாக்கம் செலுத்த வேண்டும். நகர மேயர்களும் அதிகாரங்கள் தொடர்பான கொள்கைகளை மறுஆய்வு செய்ய வேண்டும்' - என்றார். (ம)

**காணி தேவை**

திருநெல்வேலி, கோண்டாவிலில் பலாலி வீதிக்கு அருகில் காணி தேவை.

**தரகர் தேவையில்லை.**

**தொடர்புகளுக்கு:- 076 756 1570**



# சுற்றுலாவிகளை ஈர்ப்பதற்கு தாய்லாந்து கடும் முனைப்பு

பாங்கொக், ஜுன் 8

கொரோனாப் பாதிப்புக்குப் பின்னர் அதிலிருந்து படிப்படியாக மீண்டுள்ள தாய்லாந்து, சுற்றுலாத்துறையை வலுப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இது குறித்து தாய்லாந்தின் சுற்றுலாத்துறை ஆணையத்தின் சந்தைப்படுத்துதல் மற்றும் தகவல்தொடர்புகளுக்கான துணை ஆளுநர் டேன்ஸ் பெட்சுவன் தெரிவித்ததாவது: 'நாங்கள் எங்கள் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

சுற்றுலாவுக்கு மிக நம்பகத் தகுந்த தேர்வாக தாய்லாந்தை உருவாக்கப் போகிறோம். தங்கும் விடுதிகளுக்கு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும். அதன் மூலம் அங்கு சுகாதார கட்டமைப்பு உறுதி செய்யப்படும்' என்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.